# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 01 ஞாயிற்றுக்கிழமை (16-12-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:21


## பேச்சு நடத்த வரமுன்னர் புலிகள் ஆயுதங்களைக் கைவிடவேண்டும்!

### புதிய வெளிவிவகார அமைச்சர் போடுகிறார் நிபந்தனை



கொழும்பு, டிசெ.16

சமாதானப் பேச்சுக்கு முன்வருமாறு புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கும்படி வெளிநாடுகளைக் கேட்டுவருகிறோம். பேச்சு நடத்த வருவதற்கு முன்னர் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டுவிடவேண்டும்.

இவ்வாறு கூறியிருக்கிறார் புதிய அரசின் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ.

தனியார் தொலைக்காட்சி சேவை ஒன்றுக்கு நேற்று வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளைப் பேச்சு மேசைக்கு அழைத்து வர நோர்வே அரசு தொடர்ந்தும் பங்குவகித்து முயற்சி எடுக்கவேண்டும் என்று ஐக்கிய தேசிய முன்னணி அரசு விரும்புகின்றது.

நாட்டின் இறைமையையும் தேசிய ஒருமைப்பாட்டையும் பேணிக்காப்பதில் புதிய அரசு மிகுந்த உறுதியுடன் செயற்படும் - என்றும் அப்பேட்டியில் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்திருக்கிறார். (ஐ)

## ரணில் - டக்ளஸ் நேற்றுப் பேச்சு!

### சுமுகமாக நடந்ததாக ஈ.பி.டி.பி. தகவல்

கொழும்பு,டிசெ.16

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவை அழைத்து அவருடன் பேச்சு நடத்தியிருக்கிறார்.

நேற்றுக்காலை இடம்பெற்ற இச் சந்திப்பு மிகவும் சுமுகமான முறையில் அமைந்ததாக ஈ.பி.டி.பி. தெரிவித்துள்ளது.

இரு தலைவர்களும் உதவியாளர்கள் எவரும் இன்றி தனியே பேச்சு நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய சந்திப்புத் தொடர்பாக ஈ.பி.டி.பி. தரப்பில் விடுக்கப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் செயலாளர் நாயகம் கே.என். டக்ளஸ் தேவானந்தா, பிரதமரை நேரில் சென்று சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். இன்று (நேற்று) காலை இடம்பெற்ற இச்சந்திப்பு மிகவும் சுமுகமான முறையில் நடைபெற்றது. மிகவும் பயன் தரக்கூடியதாகவும் இருந்தது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேசிய நல்லிணக்க அரசு அமைப்பது சம்பந்தமாக ஆலோசனை வெளியிட்டிருந்ததும் - இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளோடு பேச்சு நடத்தப்போவதாகக்

(12ஆம் பக்கம் பார்க்க)

### திறைசேரி காலி! பொருளாதாரம் படுகுழியில்!!

# நிதி உதவிகேட்டு வெளிநாடுகளிடம் கையேந்தும் நிலையில் புதிய அரசு!

## யுத்தம் பற்றிச் சிந்திக்கவே முடியாத இக்கட்டான நிலைமை பிரதமருக்கு

கொழும்பு,டிசெம்பர்16

**ஸ்ரீலங்காவில் புதிதாகப் பதவிக்கு வந்திருக்கும் அரசு மிகமோசமான பொருளாதாரச் சீரழிவில் இருந்து நாட்டை மீட்டெடுக்கவேண்டிய கட்டாய நிலையில் இருப்பதாக மேற்குலக ராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.**

**திறைசேரி முற்றாகக் காலியான நிலையில் எத்தகைய பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களையும் முன்னெடுக்கமுடியாதவராகப் பதவிக்கு வந்துள்ள புதிய பிரதமர் நிதி உதவி கேட்டு வெளிநாடுகளிடம் கையேந்தும் நிலைமை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

புதிய பிரதமராகப் பதவியேற்ற ஒரு வார காலத்துக்குள்ளேயே நாட்டின் நிதி நிலைமை குறித்துத் தீவிர கவனம் செலுத்தவேண்டிய இக்கட்டு ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

பொருளாதாரப் பேரழிவில் இருந்து நாட்டை மீட்டு எடுக்க உதவுமாறு அவர் ஏற்கனவே மேற்குலக ராஜதந்திரிகளிடம் கோரிக்கைகளை விடுக்கத் தொடங்கிவிட்டார்.

வெளிநாடுகளின் தூதர்களுடன் நடத்திய முதல் சந்திப்புக்களின் போது நிதியுதவிகள் குறித்தே பிரதமர் முக்கியமாகப் பேசியதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நிதியுதவி வழங்குவதானால் முதலில் யுத்தமுனைப்பைக் கைவிடவேண்டும்; நாட்டை யுத்த சூழ் நிலைக்குள் இருந்து வெளியே கொண்டுவர வேண்டும் என்று மேற்குலக ராஜதந்திரிகள் பிரதமரிடம் வலியுறுத்திக் கூறியிருப்பதாகத் தெரியவருகிறது.

கடந்த அரசின் யுத்தக் கொள்கையினால் போருக்காக நாட்டின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பிரதி சபாநாயகர் பதவி ரிச்சர்ட் பத்திரனவுக்கு?

### பொ.ஐ.மு.தரப்பு ஏற்க மறுப்பு

கொழும்பு,டிசெ.16

பன்னிரெண்டாவது நாடாளுமன்றத்தின் பிரதி சபாநாயகராக முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய பிரமுகருமான ரிச்சர்ட் பத்திரன நியமிக்கப்படலாம் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக முயற்சி எடுக்கப்பட்டுவருவதாக ஆளுங்கட்சி வட்டாரங்களும் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

பிரதி சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தலைவர்களை நியமிப்பது தொடர்பாக எதிர்க்கட்சிகளுடன் பேச்சு நடத்தும் பொறுப்பை எரிபொருள், மின்சக்தி அமைச்சர் கரு ஜெயசூரியவிடம் பிரதமர் ஒப்படைத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## உலக வர்த்தக மையத்தை தாக்கப் புலிகள் திட்டமாம்!

கொழும்பு,டிசெ.16

அலரி மாளிகையையும் உலக வர்த்தக நிலையத்தையும் தாக்கி அழிக்க விடுதலைப் புலிகள் தீட்டியிருந்த திட்டம் அம்பலமாகியிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

புலிகளின் இந்தத் தாக்குதல் சதித் திட்டம் தொடர்பான தகவல்களை கல்கிசை பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவினர் தக்க நேரத்தில் கண்டுபிடித்துவிட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கோட்டையில் உள்ள உலக வர்த்தக மையத்துடன் தொடர்புடைய நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் கணனி இயக்குநரான இளைஞர் ஒரு

(12ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சுப் பொறுப்பை மகேஸ்வரனுக்கு வழங்குமாறு அரசுக்குப் புலிகள் அழுத்தம்

### 'இந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகை தகவல்

கொழும்பு,டிசெ.16

வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சராக ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனை நியமிக்குமாறு விடுதலைப் புலிகள் இலங்கையின் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழுத்தம் கொடுத்துள்ளதாக இந்தியாவில் வெளியாகும் 'இந்துஸ்தான் ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சராக தற்போது டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவரை அகற்றிவிட்டு அவரது இடத்துக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான தி.மகேஸ்வரனை இந்த அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சராக மாற்றவேண்டும்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தமிழர் கூட்டமைப்பு ஊடாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டுள்ளார்.

தற்போதைய அமைச்சரான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தொடர்ந்தும் கொழும்பிலேயே தங்கியிருப்பதால் அவருக்குத் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள், தேவைகள், அவர்களின் அபிலாஷைகள் எவையுமே புரியாது. அவரால் அவற்றை அறிந்துகொள்ளவும் முடியாது.

இதனால்தான் தமிழர்களின் பிரச்சினைகளை, தேவைகளை அறிந்து அதற்கேற்ப செயற்படக்கூடிய மகேஸ்வரனை அந்த அமைச்சுப் பதவிக்கு நியமிக்குமாறு நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறு புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளதாக 'இந்துஸ்தான் ரைம்ஸ்' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

### தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின்

## நாடாளுமன்றக் குழுத் தலைவரை தெரிவு செய்யக் குழு அமைப்பு

### நாளை மீண்டும் கூடி முடிவு


கொழும்பு,டிசெ.16

தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவரைத் தெரிவு செய்வதற்காக 4 கட்சிகளினதும் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் கொழும்பில் ஒன்றுகூடிய தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் ஏற்பாட்டாளர்கள் நடத்திய கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் அதன் செயலாளர் இரா.

(12ஆம் பக்கம் பார்க்க)



எதிர்காலச் செயற்பாடுகளை விளக்குவதற்காக ஈ.பி.டி.பி. கட்சியின் யாழ்.அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் எடுக்கப்பட்ட படங்கள்.

கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன், நல்லூர் பிரதேச சபைத் தலைவரும் யாழ்.மாவட்ட உதவி அமைப்பாளருமான க.மணிபல்லவராஜன் (நிஷாந்தன்) ஆகியோர் கட்சியின் நிலைப்பாட்டை விளக்குவதை முதல் படத்தில் காணலாம்.

கட்சியினால் நிர்வகிக்கப்படும் பிரதேச சபைகளின் தலைவர்களை அடுத்துள்ள படத்தில் காணலாம்.

*(படம்: பொ. இராஜேஸ்வரன்)*

# தமிழ்மக்களுக்கு எதிராக புதிய அரசு செயற்பட்டால் அதை எதிர்ப்போம்!

## ஈ.பி.டி.பியின் யாழ். அமைப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.16

பதவி ஏற்றிருக்கும் புதிய அரசோ அல்லது அதற்கு ஆதரவு வழங்கும் ஏனைய கட்சிகளோ தமிழ் மக்களின் நலன்களுக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டால் ஈ.பி.டி.பியினராகிய நாம் அதனை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கப்போவதில்லை. அவற்றுக்கு எதிராக மக்களையும் இணைத்துக்கொண்டு வீதியில் இறங்கிப் போராட ஈ.பி.டி.பி. தயாராகவுள்ளது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளருமான கே.வி.குகேந்திரன்(ஜெகன்).

ஈ.பி.டி.பியின் யாழ்மாவட்ட அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தேர்தல் முடிவுகள் எமக்குத் தோல்வியைத் தரவில்லை. ஒருவகையில் வெற்றியையே தந்துள்ளன. கடந்த தேர்தலை விட இம்முறை அதிகமான மக்கள் எமக்கு வாக்களித்துள்ளனர்.

மதத் தலைவர்கள், பல்கலைக் கழக சமூகத்தினர், ஆசிரிய சமூகத்தினர், சில பொது அமைப்புக்கள் மற்றும் ஏனைய சக்திகள் ஈ.பி.டி.பிக்கு எதிராகவும் கூட்டமைப்புக்கு ஆதரவாகவும் பகிரங்கமாகவே தமது நடவடிக்கைகளை மேற்கொண்டன். ஆனால் இவ்வளவு எதிர்ப்புக்கு மத்தியிலும் தனித்துப் போட்டியிட்டு 57ஆயிரம் வாக்குகளைப் பெற்று இரண்டு ஆசனங்களைக் கைப்பற்றியிருக்கின்றோம். இது எமக்குக் கிடைத்த வெற்றி ஆகும்.

தீவுப் பகுதியில் அதிகமான கள்ள வாக்குகள் போடத் திட்டமிட்டிருப்பதாகப் பொய்ப்பிரசாரம் செய்யப்பட்டதால் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு கண்காணிப்பாளர்களின் கவனம் முழுவதும் தீவகப் பகுதி மீதே திரும்பியிருந்தது. ஆனால் ஏனைய பகுதிகளில் கூட்டமைப்பிற்கு சுமார் 40ஆயிரத்துக்கும் மேற்பட்ட கள்ளவாக்குகள் போடப்பட்டன. இவற்றில் சுமார் 20ஆயிரம் வாக்குகள் பல்கலைக் கழக மாணவர்கள் சிலரால் திட்டமிட்டுப் போடப்பட்டன. வாக்குச்சாவடிகளில் இருந்த எமது வாக்கு முகவர்கள் சிலர் சயனைட் குப்பி, தகடு போன்றவற்றைக் காட்டி பயமுறுத்தப்பட்டனர்.

கள்ளவாக்குப் போடும் நடவடிக்கைகளை காட்டிக்கொடுத்தால் பாரிய விளைவுகள் ஏற்படும் எனவும் அச்சுறுத்தப்பட்டனர்.

இவற்றுக்கெல்லாம் தகுந்த ஆதாரங்கள் எம்மிடம் உண்டு. அந்த ஆதாரங்களைக் காட்டி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கும் ஏற்பாடு செய்துள்ளோம்.

இவற்றுக்குச் சாட்சியமளிப்பதற்கு மக்கள் மத்தியிலிருந்தும், தேர்தல் அலுவலர்கள், கண்காணிப்பாளர்கள் மத்தியில் இருந்தும் பலர் முன்வந்திருக்கின்றார்கள்.

ஈ.பி.டி.பியின் அரசியல் அதிகாரத்தையும் மக்கள் செல்வாக்கையும் குறைப்பதற்கும், குழப்புவதற்கும் சில சக்திகள் திட்டமிட்டு சதி செய்துள்ளன.

எந்தச் சக்திகள் எமக்கு எதிராகச் செயற்பட்டாலும் மக்கள் மத்தியில் எமக்கு இருக்கின்ற ஆதரவை குறைத்து விடமுடியாது.

தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பின் தேர்தல் முடிந்து பத்து நாள்களுக்குள்ளேயே முரண்பட்டுக்கொண்டு வெவ்வேறு திசையில் நிற்கின்றார்கள். கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுடன் கலந்தாலோசிக்காமல் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இந்தியத் தூதருடன் பேச்சு நடத்தியிருக்கின்றனர்.

கடந்த எட்டு மாத காலமாக அமைச்சுப் பதவி எடுத்து நாம் மக்களுக்குச் செய்த சேவையைப்போல எந்தக் காலத்திலும் எவரும் செய்ய முடியாது. செய்வதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காது என்பதையும் உறுதியுடன் கூறிக்கொள்கின்றோம்.

தற்போது கிடைத்திருக்கும் இரண்டு ஆசனங்களைக் கொண்டு மக்களுக்குத் தொடர்ந்தும் எமது சேவையை வழங்குவோம். தற்போது பதவி ஏற்றிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அரசில் அமைச்சர்களாக இருப்பவர்கள் எமக்குப் பழக்கப்பட்டவர்களே. அவர்களுடன் பேசி எமது மக்களுக்கு செய்யக்கூடியவற்றைச் செய்தே தீருவோம்.

தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை அமைப்பதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எமது தலைவா டக்ளஸ் தேவானந்தாவுடன் பேச்சு நடத்தியிருக்கிறார்.

### பொய்ப்பிரசாரங்கள்

தேர்தல் முடிவுகளைக் கண்டு எமது பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் அனைவரும் குடாநாட்டை விட்டு வெளியேறி வருவதாகவும் அரச சொத்துக்கள் பலவற்றை நாம் விற்பதாகவும் பொய்ப்பிரசாரங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன. நாம் எவரும் நாட்டை விட்டு ஓடப்போவதில்லை. அரச சொத்துக்களை விற்கும் நிலையில் நாம் இல்லை. கடந்த அரசாங்கத்தில் எமக்குக் கிடைத்த அமைச்சுப் பொறுப்பைப் பயன்படுத்தி கோயில்களின் புனமைப்புக்கு நிதி வழங்கிய போது மகேஸ்வரன் மற்றும் அவரது கட்சியினர், ஆதரவாளர்கள் எம்மைக் கேலி செய்தார்கள். ஆனால் அதே மகேஸ்வரனுக்கு தற்போது இந்து சமய விவகார அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. அதுவும் பூரணமான அதிகாரங்கள் அற்ற பதவியாகவே அது வழங்கப்பட்டுள்ளது.

மகேஸ்வரன் தேர்தல் தினத்தன்று வாக்களிக்கச் சென்ற ஓர் இளம் பெண் மீது தனது மெய்ப்பாதுகாவலர்களான பொலீஸாரை ஏவிவிட்டதால் பொலீஸாரில் ஒருவர் அந்தப் பெண்ணின் மார்புச் சட்டையைப் பிடித்து இழுத்து அடித்துள்ளார்.

இவ்வாறு அடாவடித்தனங்களைச் செய்த மகேஸ்வரன் தான் மட்டும் எத்தனையோ கள்ளவாக்குகளைப் போட்டுப் பதவிக்கு வந்துள்ளார்.

எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் எமது கொள்கையில் மாற்றம் கிடையாது. அதனை வலியுறுத்த எந்தக் கட்டத்திலும் நாம் பின்னிற்க மாட்டோம்.

அத்துடன் தமிழ் மக்களுக்கு அரை குறைத் தீர்வு வழங்கப்படுவதை நாம் கடுமையாக எதிர்ப்போம். அதற்கு ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் - என்றார்.

இப்பத்திரிகையாளர் மாநாட்டில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க.மணிபல்லவராஜன்(நிஷாந்தன்), வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன், வலி.தெற்குப் பிரதேச சபைத் தலைவர் கே.கமலசேகரன்(பாபு), வலி.கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம், ரி.றீகன்(றூபன்), வேலணை பிரதேச சபைத் தலைவர் என்.கருணாகரகுருமூர்த்தி, வலி.தென்மேற்குப் பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அனரன் ஜோன்சன்(ஜீவா), ஈ.பி. டி.பியின் தென்மராட்சி அமைப்பாளர் சூ.அலெக்ஸாண்டர்(சாள்ஸ்), நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் புலவர் ஏ. டபிள்யூ.அரியநாயகம், கரவெட்டி தெற்கு - மேற்கு பிரதேசசபைத் தலைவர் ஜெயராஜ், உடுப்பிட்டித் தொகுதி அமைப்பாளர் ப.ரவீந்திரன் (ராசிக்) மற்றும் ஈ.பி.டி.பியின் தகவல் தொடர்புப் பொறுப்பாளர் திவாகர், வசந்தன், ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(ஜ-4-9-173-180)


சுடர் ஒளி

டிசெ.16-22,2001 இதழில்

★ ஆட்சி மாறினாலும் குடாநாட்டில் நிலைமை மாறவில்லை.

★ யுத்தமா சமாதானமா? தீர்மானிப்பது யார்? கைமாறிய அமைச்சுப் பொறுப்பும் கைகட்டிநிற்கும் படையினரும்.

★ வன்னி வாக்களிப்புத் தடை விவகாரம் எருமை மாட்டில் மழை போலத்தான்?

★ ஜோர்ஜ் பெர்னாண்டஸை கலக்கும் சவப்பெட்டி கொள்வனவு ஊழல்.

★ கிழக்கில் புலிகள் நடத்திய இரு பதிலடித் தாக்குதல்கள்.

★ வன்செயல்களின் நிலைகளனாக மாறிய பாத்ததும்பறை.

★ இழுபறியில் இடம்பெற்ற அமைச்சரவை நியமனங்கள்.

மற்றும் இலவச மருத்துவ ஆலோசனை, சிறுகதை, சினிமா, சிறுவர் பகுதி, மசாலா மிக்ஸ் உட்பட சுவையான அம்சங்கள். (C/19783)


'உதயன் செய்திக்கு' ஈ.பி.டி.பி. விளக்கம்

# தற்பாதுகாப்புக் கருதியே ஆயுதங்களை நாடுகிறோம்

## படையினருக்குத் துணைபோனதில்லை

'ஈ.பி.டி.பியின் எதிர்காலம் குறித்து புதிய அரசுடன் பேசுவார் டக்ளஸ்' என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் முன்பக்கத்தில் வெளியான செய்தியில் குறிப்பிடப்பட்ட சில விடயங்கள் தொடர்பாக அக்கட்சி நேற்று மறுப்பு அறிக்கை ஒன்றை விடுத்தது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

1990ஆம் ஆண்டு தொடக்கம் ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசுக்கும் ஆதரவாக படை நடவடிக்கைகளில் கட்சி ஈடுபட்டு வந்துள்ளதாக மூத்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்ததாக இன்றைய 'சுடர் ஒளி' மற்றும் 'உதயன்' நாளிதழ்களில் வெளிவந்துள்ள தகவல் உண்மைக்குப் புறம்பானதாகும்.

மக்களின் நல்வாழ்வை உறுதிப்படுத்தவும், உத்தரவாதப்படுத்தவும் தேவையான நடவடிக்கைகளை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி எப்போதும் எடுத்து வந்துள்ளது. அவ்வகையில் அதன் பணி தொடரும். எனினும் ஈ.பி. டி.பி. அதன் அரசியல் பணிகளை முன்னெடுப்பதற்கு ஆயுதங்களின் அச்சுறுத்தல் நிலவுகின்றது. கொலை பயமுறுத்தல்களும் மிரட்டல்களும் தொடர்கின்றன. இதனாலேயே தற்பாதுகாப்புக் கருதி ஆயுதங்களின் துணையை நாடவேண்டியதாகிறது. எனவே பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளுக்கு உதவியாகத் துணைபோவதாகக் கூறப்படுவது தவறானதாகும். செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் கூற்று தவறாகத் திரிக்கப்பட்டுள்ளது.

மக்களால் தெரிவு செய்யப்படும அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்து மக்களின் நலன்களைப பேணுவது எந்த வகையிலும் இன விரோதமானதும் அல்ல தேசத்துரோகமானதும் அல்ல என்றே நாம் திடமாக நம்புகிறோம். ஏனெனில் இலங்கை அரசாங்கத்தை தமிழ் பேசும் மக்கள் பகைமை உணர்வுடன் எதிரியாக நோக்கவில்லை என்பதே உண்மையாகும்.

மேலும் ஈ.பி.டி.பி. என்பது சட்டவிரோதமான ஆயுதக்குழு அல்ல. அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சி ஆகும். மக்களின் பலமான ஆதரவைப் பெற்ற ஓர் அரசியல் கட்சியாகும். எனவே ஈபி.டி.பியின் பாதுகாப்பைக் கேள்விக்குள்ளாக்குவது என்பது இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தை

(12ஆம் பக்கம் பார்க்க)

# கரையோர மாவட்டம் குறித்து தமிழர் மகாசபை கோரிக்கை

கொழும்பு,டிசெ.16

கல்முனை கரையோர மாவட்டம் அமைக்கப்படுவதால் தமிழர்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளை உணர்ந்து அதனை எதிர்ப்பதற்கு தனித்தும் கூட்டமைப்புடன் இணைந்தும் செயற்பட வேண்டும்.

இவ்வாறு தமிழர் மகா சங்கத்தினர் அம்பாறை மாவட்ட தமிழ்க் கட்சி கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேருவிடம் கோரியுள்ளனர்.

திருக்கோயிலில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினரின் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

அம்பாறை மாவட்டத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும். தமிழ் மக்களின் உரிமைகள் படிப்படியாக பறிக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பிரதேச செயலகங்கள் பல அங்கீகரிக்கப்படாதுள்ளன. கல்முனை ஆதார வைத்தியசாலையை பொது வைத்தியசாலையாக தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். திருக்கோயில் மற்றும் காரைதீவு வைத்தியசாலைகளும் தரம் உயர்த்தப்பட வேண்டும். இத்தகைய பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் எமது பகுதிக்கு முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளன. அதற்கு முன்னர் எமது உரிமையுடன் கூடிய செயற்திட்டங்களை முன்னெடுத்துச் செயற்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த அவர்:-

எனது தந்தை அறப்போர் அரியநாயகம் காட்டிய நேரிய வழியில் நின்று எனது அரசியலை நடத்துவேன். எதிர்காலத்தில் உங்களின் கருத்துகளை அறிந்து அவற்றுக்கு மதிப்பளித்து எனது மக்கள் சேவையை தொடருவேன் - என்றார். (ஜ-6)



இலங்கை வங்கியின் 62ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ் மாவட்ட இலங்கை வங்கி ஊழியர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இரு குளிர்சாதனப் பெட்டிகளை அன்பளிப்புச் செய்தனர்.

யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி நவமலர் கனகரட்ணம், யாழ். மாவட்ட முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகத்திடமிருந்து அவற்றைப் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

அருகில் இலங்கை வங்கி யாழ் மேற்தரக் கிளையின் பிரதான முகாமையாளர் சி.நடராஜலிங்கம், வைத்திய அதிகாரி கலாநிதி திருமதி நாகேந்திரா, இலங்கை வங்கியின் யாழ் இரண்டாம் கிளை முகாமையாளர் எஸ்.விக்னராஜா ஆகியோரும் காணப்படுகின்றனர். (ஜ-9)



மேற்குக்கரை நகரான ரமழாவில் இஸ்ரேலிய இராணுவத்தினரால் புல்டோசர்கள் மூலம் இடித்துத் தகர்க்கப்பட்ட 'பலஸ்தீனத்தின் குரல்' வானொலி நிலையத்தைப் படத்தில் காணலாம்.

# பின்லேடன் பதுங்கியுள்ள குகை அமெரிக்கப் படையால் முற்றுகை!

ஆப்கானிஸ்தானின் தோரா போரா அருகே உள்ள குகைத் தொடரில் பதுங்கியுள்ள ஒஸாமா பின்லேடனை அமெரிக்க இராணுவத்தினரும் தலிபான் எதிர்ப்புப் படையினரும் சுற்றிவளைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேசமயம் - பின்லேடனின் அல்கெய்டா அமைப்பினர் சரணடைவது தொடர்பாக நடத்தப்பட்ட பேச்சு தோல்வியடைந்தது.

அல்கெய்டாவினர் சரணடையக் கொடுக்கப்பட்ட காலக்கெடு முடிவடைந்துவிட்டதாகவும் -

இனிமேல் கால அவகாசம் வழங்கப்போவதில்லை என்றும் -

தலிபான் எதிர்ப்புப் படையின் தளபதி அறிவித்துள்ளார்.

கிழக்கிலும், மேற்கிலும் பள்ளத்

**தோரா போரா குகைப் பகுதி குண்டு வீச்சால் எரியும் காட்சி.**



தாக்குகளால் சூழப்பட்ட குகைத் தொடர் ஒன்றில் பின்லேடன் மறைந்திருப்பதாக நம்பப்படுகிறது.

இந்தப் பகுதியை, வடக்கிலிருந்து தலிபான் எதிர்ப்புப் படையினர் நெருங்கி வருகிறார்கள். அங்கிருந்து அல்கெய்டாவினர் வெளியேற முடியாதபடி தெற்கில் பாகிஸ்தானிய இராணுவத்தினர் தடுத்து வருகின்றனர்.

அமெரிக்கத் துருப்புகளும், விமானங்களும் குகைத்தொடர்மீது கடும் தாக்குதலைத் தொடுத்துள்ளன.

இதேவேளை, நூற்றுக்கணக்கான அமெரிக்கக் கடற்படையினர் கந்தகார் விமானநிலையத்தில் நேற்று அதிகாலை தரையிறங்கியுள்ளனர்.

இதற்கிடையில் தலிபான் தலைவர் முல்லா முகமட் ஓமரை பிடிப்பதற்கு உதவும் தகவலைத் தருபவருக்கு ஒருகோடி டொலர்கள் பரிசளிக்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்துளளது.

(ஓ-10)


## விமானத் தற்கொலைத் தாக்குதலில்

# பின்லேடனை குற்றவாளியாக்கும் பென்டகனின் ஒளிநாடா ஆதாரம்!

வாஷிங்ரன்,டிசெ.15

கடந்த செம்ரெம்பர் மாதம் அமெரிக்காவில் 3 ஆயிரத்து 329 பேர் உயிரிழக்கக் காரணமான விமானத் தற்கொலைத் தாக்குதல்களின் பின்னணியில் ஒஸாமா பின்லேடன் இருந்ததை உறுதிப்படுத்தும் ஒளி நாடாவை கடந்த வியாழக்கிழமை 'பென்டகன்' வெளியிட்டது.

இந்த ஒரு மணிநேர ஒளிநாடாவில் மலைப்பகுதி ஒன்றில் உள்ள



அமெரிக்காவில் விற்பனை நிலையம் ஒன்றில் பின்லேடன் குறித்த ஒளிநாடா ஒளிபரப்பப்படுகிறது.

தனது தங்குமிடத்தில் அமெரிக்க விமானத் தற்கொலைத் தாக்குதல் பற்றி அவை நடந்த சமயத்தில் ஒஸாமா பின்லேடன் தனது சகாக்களுடன் பேசிச் சிரித்து உரையாடும் காட்சிகள் உள்ளன.

வெள்ளைநிற தலைப் பாகையும், பச்சைநிற இராணுவ மேலங்கியும் அணிந்த பின்லேடன், விமானத் தற்கொலைத் தாக்குதல்கள் பற்றி 5நாள்களின் முன்னரே தனக்குத் தெரியும் என்று கூறுவது படம் பிடிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு ஆப்கான் நகரான ஜலலாபாத் தலிபான்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பின்னர், அங்கிருந்த வீடொன்றிலிருந்து இந்த ஒளிநாடா கண்டெடுக்கப்பட்டதாக அமெரிக்கப் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்தனர்.

மிகவும் தரம் குறைந்த ஒளி, ஒலிப் பதிவைக்கொண்ட ஒளிநாடாவை நான்கு அரேபியர்கள் மொழி பெயர்த்துள்ளனர்.

அமெரிக்க உலக வர்த்தக நிலையத்தின் மீது விமானங்கள் மோதியதைக் கைகளால் நடித்துக் காட்டும் பின்லேடன், முதல் விமானத்தைக் கடத்திய குழுவுக்கு மொகமட் அட்டா தலைமை வகித்ததாக ஒளிநாடாவில் பின்லேடன் கூறியுள்ளார்.

விமானங்களைக் கடத்தியவர்களில அநேகருக்கு தற்கொலைத் தாக்குதல



**ஒளிநாடாவில் பின்லேடன் தோன்றும் காட்சி.**

குறித்து எதுவும் தெரியாதென்றும் -

அவர்கள் மாபெரும் தாக்குதலுக்காக அமெரிக்காவுக்குச் செல்லும்படி மட்டுமே அறிவுறுத்தப்பட்டிருந்தார்கள் என்றும் -

### உலக அரங்கில்

பின்லேடன் கூறியுள்ளார்.

பின்லேடனுடன் அல்கெய்டாவின் இரண்டாவது தளபதி அய்மன் அல் ஜவாஹ்ரி, பேச்சாளர் அபு கயாத் ஆகியோர் அமர்ந்துள்ளனர்.

இதற்கு ஆப்கான் நகரான கந்தகாரின் வாடி வீட்டில் இந்த உரையாடல் இடம்பெற்றதாக 'பென்டகன்' தெரிவித்தது.

(ஓ-10)

## 'பென்டகன்' ஒளிநாடா குறித்து பரவலாக எழும் சந்தேகங்கள்

விமானத் தற்கொலைத் தாக்குதலின் பின்னணியில் பின்லேடன் இருப்பதை உறுதிப்படுத்த 'பென்டகன்' வெளியிட்டுள்ள ஒளிநாடா குறித்து பலவித சந்தேகங்கள் எழுப்பப்பட்டுவருகின்றன.

பின்லேடன் தனது சகாக்களுடன் அமெரிக்க விமானத் தற்கொலைத் தாக்குதல் பற்றி உரையாடுவதைக் காண்பிக்கும் ஒளிநாடாவில் பதிவாகியுள்ளவை, உண்மையில் பின்லேடன் மற்றும் அவரது சகாக்களுடையவை தானா என்பதில் சந்தேகம் எழுந்துள்ளது.

தொழில்நுட்ப வளர்ச்சிபெற்ற அமெரிக்காவில், பின்லேடன் உள்ள ஒளிப்பதிவில், வேறு ஒருவரை பின் லேடனின் குரலில் பேசவைத்து ஒலிப்பதிவு செய்வதும் -

கணனித் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி பின்லேடனின் வாயசைப்பை அதற்கேற்ப தத்ரூபமாக அமைப்பதும் -

சாத்தியம் என்று கருதப்படுகிறது.

இதனைப்பயன்படுத்தி, அமெரிக்க விமானத் தற்கொலைத் தாக்குதலின் பின்னணியில் பின்லேடன் இருப்பதாக உறுதிப்படுத்தி. அவரை கொன்றொழிக்க அமெரிக்கா திட்டமிடுவதாக இஸ்லாமிய அடிப்படைவாதிகள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது.

(ஓ).

## ஆப்கான் இடைக்கால அதிபர் காபூலுக்கு முதல் விஜயம்

காபூல்,டிசெ.15

ஆப்கானின் இடைக்கால அரசின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள கமீத்



ஹமீத் கர்சே

கர்சே கடந்த வியாழக்கிழமை தலைநகர் காபூலில் உள்ள அரண்மனைக்குள் முதன் முதலாக விஜயம் செய்தார்.

டிசெம்பர் 22ஆம் திகதி கர்சே தலைமையிலான இடைக்கால அரசு ஆப்கானில் பதவியேற்கிறது.

முன்னாள் அதிபர் பர்குனுதீன் ரபானி, தனது ஆட்சி அதிகாரத்தை இடைக்கால அரசுக்கு விட்டுக்கொடுபபதாகவும் -

அதற்குப் பதிலாக முக்கிய அமைச்சுகள் சிலவற்றைத் தனது அமைப்புக்குத் தரவேண்டும் என்றும் -

கேட்டுள்ளார்.

இடைக்கால அரசு பதவியேற்க முன்னரே ஆப்கானில் பதவிப் போட்டிகள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

(ஓ-10)

## அமெரிக்கப் போர் விமானம் இந்து சமுத்திரத்தில் வீழ்ந்தது

வாஷிங்ரன்,டிசெ.15

ஆப்கானிஸ்தான் போரில் ஈடுபட்டிருந்த அமெரிக்காவின் 52B-1 ரகக் குண்டுவீச்சு விமானம் ஒன்று இந்து சமுத்திரத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. அதிலிருந்த 4 விமானிகளும் காபபாற்றப்பட்டதாக அமெரிக்க இராணுவ அதிகாரிகள் கூறினர்.

இந்து சமுத்திரத்தில் பிரிட்டிஷ் தளம் அமைந்துள்ள டியாகோ கார்சியா தீவுகளுக்கு 100 கிலோ மீற்றர்கள் வடக்கே கடற்பகுதியில் நேற்று முன்தினம் இந்த விமானம் வீழ்ந்தது.

ஆபகானிஸ்தான் போரில் ஈடுபட்ட ஆள்களால் செலுத்தப்படும் விமானம் ஒன்று வீழ்ந்திருப்பது இதுவே முதற்றடவை. இதற்கு முன்னர் ஆளில்லாத உளவு விமானம் மற்றும் ஹெலிகள் ஆப்கான் போரில் ஈடுபட்ட சமயத்தில் வீழ்ந்து நொறுங்கியிருந்தன.

அமெரிக்க விமானப் படையின் எரிபொருள் தாங்கி விமானத்தில் இருந்து எரிபொருளை வான்வெளியிலேயே பெற்றுக்கொள்ளச் சென்ற சமயத்தில் குண்டுவீச்சு விமானம் கடலில் வீழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

விபத்துக்குள்ளானபோது விமானத்தில் குண்டுகள் எடுத்துச் செல்லப்பட்டனவா? என்று கூற 'பென்டகன்' மறுத்துவிட்டது.

(ஓ)

## 'பலஸ்ரிக்' ஒப்பந்தத்திலிருந்து விலகுகின்றது அமெரிக்கா!

வாஷிங்டன்,டிசெ.15

'பலஸ்ரிக்' ஏவுகணை ஒழிப்பு ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகிக்கொள்வதாக ரஷ்யாவுக்கு அமெரிக்க அதிபர் புஷ் நேற்றுமுன்தினம் முறையான முன்னறிவித்தல் கடிதம் அனுப்பினார்.

அமெரிக்காவின் தேசிய ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்தை செயற்படுத்துவதற்காகவே ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

30 வருடங்களாக ஆயுதப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தி அமைதியை நிலைநாட்டிய இருதரப்பு அழிவுத் தடுப்பு உத்தரவாத ஒப்பந்தத்தின் விதிகளுக்கிணங்கத் தான் ரஷ்யாவுக்கு முன்னறிவித்தல் கடிதம் அனுப்பியுள்ளதாக அதிபர் புஷ் கூறினார்.

ஏவுகணைகளை வானிலேயே தாக்கியழிக்கும் 'பலஸ்ரிக்' ரக ஏவுகணைகளை உற்பத்திசெய்ய அமெரிக்கா முயற்சிக்கிறது.

உலகளவில் ஆயுத சமநிலையை அமெரிக்காவின் முயற்சி சீர்குலைக்கும் என்பதால் அதற்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

ஆகவேதான் 'பலஸ்ரிக்' ஏவுகணைத் தடுப்பு ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா வெளியேறுகிறது.

(ஓ-10)

## இந்திய நாடாளுமன்றத் தாக்குதல்:

# தீவிரவாதிகள் திட்டம் பலித்திருந்தால் பெரும் அனர்த்தம் விளைந்திருக்கும்!

புதுடில்லி,டிசெ.15

இந்திய நாடாளுமன்ற வளாகத்தில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளின் திட்டம் வெற்றியடைந்திருநதால் நாடாளுமனறக் கட்டடம் கடும் சேதத்துக்கு உள்ளாகியிருக்கும் என்றும் -

பல முக்கிய பிரமுகர்கள் உயிரிழந்திருப்பார்கள் என்றும் -

இந்திய இராணுவம் தெரிவித்தது. தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் வந்த காரில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டுகளை செயலிழக்கச் செய்யும் பணிகள் நேற்று அதிகாலை வரை தொடர்ந்தது.

நேற்றுமுன்தினம் பகல் 11.40 மணியளவில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் உறுப்பினர்கள் திரண்டிருந்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சோனியா காந்தி அப்போதுதான் நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறியிருந்தார். பிரதமர் வாஜ்பாய் அவைக்கு வரவில்லை.

அந்தச் சமயத்தில் நாடாளுமன்ற வெளிவாயில் வழியே உள்துறை அமைச்சகப் பாதுகாவலர்கள் போன்று, அனுமதி அட்டை மற்றும் 'சைரன்' பொருத்தப்பட்ட வெள்ளை நிறக் காரில் பாதுகாப்புப் படையினரின் கண்ணில் மண்தூவி விட்டுத் தீவிரவாதிகள் உள்ளே நுழைந்தனர்.

அவர்கள் குடியரசுத் துணைத் தலைவர் நுழைவதற்கான வாயிலை நோக்கி விரைந்தனர்.

ஆனால் குடியரசுத் துணைத்



தலைவரின் பாதுகாவலர்கள் காரைத் தடுத்தனர். அப்போது நிகழ்ந்த மோதலில் ஒரு பாதுகாவலர் கொல்லப்பட்டார்.

பிரதான வாயிலை நோக்கி ஓடிய ஒரு தீவிரவாதி வாசல் படியிலேயே சுட்டக் கொல்லப்பட்டார்.

4 தீவிரவாதிகள் நாடாளுமன்றக் கட்டடத்தின் கோபுரத்தை நோக்கி ஓடினார்கள். இந்தியப் படையினர் அவர்களில் மூவரைச் சுட்டுக் கொன்றனர். ஒரு தீவிரவாதி தனது உடலில் கட்டப்பட்டிருந்த வெடிகுண்டை வெடிக்க வைத்து இறந்தார்.

இந்த மோதலில் படுகாமடைந்த தீவிரவாதி ஒருவர் உயிருடன் தப்பிவிட்டதாகப் பாதுகாப்புப் படையினர் சந்தேகம் கொண்டுள்ளனர்.

இறந்து கிடந்த தீவிரவாதிகளின சடலங்களிலிருந்தும், அவர்கள் கொண்டு வந்த கைப்பைகளிலும், வெடி குண்டுகள் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டன அல்லது செயலிழக்கச் செய்யப்பட்டன.

பல கிலோகிராம்கள் எடை கொண்ட வெடிகுண்டுகள் தீவிரவாதிகள் வந்த காரில் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்தக் காரை நாடாளுமன்றக் கட்டடத்தில் மோதவும் - மக்களவை, மாநிலங்களவை கூட்டங்கள் நடந்த மண்டபங்களுக்குள் தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தவும் - தீவிரவாதிகள் திட்டமிட்டிருந்ததாகத் தெரிய வருகிறது.

அவர்களது திட்டம் நிறைவேறியிருந்தால் இந்தியா மிக மோசமான அனர்த்தம் ஒன்றைச் சந்தித்திருக்கும் என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். இதற்கிடையில், இந்திய நாடாளுமன்றத் தாக்குதல் சம்பவத்துக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று பெரும்பாலான காஷ்மீரத் தீவிரவாத அமைப்புகள் மறுத்துள்ளன.

பாகிஸ்தானிய அரசும் இத் தாக்குதலுக்குத் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

(ம)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 16 - 05 - 1934

மறைவு 16 - 11 - 2001

கருகம்பனை

## அமரர் சுப்பிரமணியம் குமரேசர்பிள்ளை

"குஞ்சி"

கை வைத்த தொழிலெல்லாம்
கலகலவெனப் பொன் சொரியும்
கைராசியால் என்றும்
கலகலப்பாய் நீ வாழ்ந்தாய்!
கலைஞர்க்கும் நண்பர்க்கும்
கற்பகமாய் நிழல் கொடுத்தாய்!
சுற்றத்தார் மதித்திடவே
துணையாக நீ இருந்தாய்!
எல்லோர் மனங்களிலும்
என்றும் நீர் நிலைத்திருப்பீர்!

"கைலாச வாசம்",
முத்துக்கிருஷ்ண வீதி,
சுன்னாகம். (C/19780)

சு.நவரத்தினம் குடும்பம்,
க.மகேந்திரன் குடும்பம்.

# முதலாவது ஆண்டு நினைவில்

16-12-2001



## அமரர் ஐ.கிருஷ்ணபிள்ளை


(உரிமையாளர் : ஸ்ரீதிலகா பாதணி நிலையம் - நெல்லியடி)

அன்பைத் தினம் சொரிந்து எம்மை
ஆளாக்கி வைத்த தந்தை நீ!
இன்பத்தைத் தினம் தந்து எம்மை
ஈடேற வைத்த தந்தை நீ!
உண்மையைத் தினம் சொல்லி எம்மை
ஊரறிய வைத்த தந்தை நீ!
எல்லாம் தினம் தந்தும் எம்மை
ஏவ்வாறு ஏமாற்றினீர்கள்?

'ஸ்ரீதிலகா',
வதிரி.

மனைவி,
மக்கள், மருமக்கள். (96000)

# 33ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 09 - 08 - 1943

மறைவு 14 - 11 - 2001

அமரர்

## R.செல்லையா துரைரத்தினம்

(பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன இளைப்பாறிய
உத்தியோகத்தரும்,
கொ/வெஸ்லி கல்லூரி முன்னாள் ஆசிரியரும்)

எங்கள் குலவிளக்கே! எமதினிய அப்பாவே!
எங்களைப் பிரிந்தின்று ஒரு திங்களுமானதுவே!
தங்கள் பிரிவாலே அனலிடைப் புழுவானோம்
தங்களான்மா சாந்திபெற வேண்டுகின்றோம்.

89, முதலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (95994)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# ஊர்காவற்றுறையில் மனையியல் பயிற்சி நெறிகள்

ஊர்காவற்றுறை,டிசெ.16

வடக்கு - கிழக்கு மாகாணக் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் ஊர்காவற்றுறை மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் 2002ஆம் ஆண்டு தொடங்கப்படவுள்ள தையல், மனையியல், கைவேலை, விவசாயம், காலநடைவளர்ப்பு, சுகாதாரம், சமூகம் ஆகிய புதிய பயிற்சி நெறிகளுக்கு பயிற்சியாளர்களை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் ஆகக்குறைந்தது ஜி.சீ.ஈ. (சா.தரம்) கற்றவர்களாகவும், 15 - 35 வயதுக்குட்பட்டவர்களாகவும், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வசிப்பவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

பயிற்சிக்காலம் ஒருவருடமாகும். மேற்படி தகைமைகளையுடையவர்கள் முழுப்பெயர், முகவரி, பிறந்ததிகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமை, கிராமசேவகர் பிரிவு ஆகிய விவரங்கள் உள்ளடக்கிய தமது விண்ணப்பத்தினை எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் (18.12.2001) ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அனுப்பிவைக்குமாறு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

(ஓ-16)

## குமரன் கல்வி நிலையம்

கந்தரோடை

துரித மீட்டல் A/L 2002

**LOGIC**

எஸ்.எஸ்.மனோகரன்

பிரிவு 1, 11 திங்கள் 7.30 மணி

துரித மீட்டல் A/L 2002

இந்து நாகரிகம்
S.சுரேஸ்

நாடகமும் அரங்கியலும்
I.சத்தியா

சனி, ஞாயிறு – 12 மணி
செவ்., வியா., வெள்ளி –1மணி

ஆண்டு 5 - 11 வரையான
வகுப்புகள் ஆரம்பம்

2ஆம் கட்ட மாணவர்கள் சேர்ப்பு:
17.12.2001 நாளை திங்கள் 8 மணி.
குடாநாட்டின் முன்னணி ஆசிரியர்கள் (95997)

## SPECIAL SINHALA CLASS

- ★ ஆரம்பத்திலிருந்து துரித போதனை.
- ★ பேச, எழுத, வாசிக்க.
- ★ பரீட்சைக்குரிய பாடத் திட்டம்.
- ★ பட்டதாரிகள், பயிலுநர்கள், மாணவர்கள் ஆகியோருக்குரிய கற்கை நெறி.

ஆசிரியர்:
**என்.கிருபைராஜா**
(ஓய்வுபெற்ற பேஸ் நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர் – முதலியார்)

ஆரம்பம்:
17-12-2001 மு.ப. 10 மணி

**NEW SCIENCE HALL**
கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம். (95995)

## COMPUTER OPERATOR தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள உளநலத்துறை சார்ந்த இணையத்தளம் ஒன்றில் பணியாற்றக்கூடிய ஆங்கில அறிவுடைய ஒருவரும், அதேதுறையில் தெல்லிப்பழையில் உள்ள அமைப்பு ஒன்றில் Computer Operator ஆகப் பணியாற்றக்கூடிய ஆங்கில அறிவுடைய ஒருவரும் ஒப்பந்த அடிப்படையில் தேவை. சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

(உளநலத்துறையில் ஈடுபாடு இருப்பின் குறிப்பிடவும்.)

தொடர்பு:- விளம்பர இல.1415,
மே/பா. உதயன்,
யாழ்ப்பாணம். (95990)

# கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.16

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி இரண்டாம் வருட மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சை அடுத்த வருடம் பெப்ரவரி மாதமும் அதனையடுத்து அவர்களுக்கான இறுதிப் பரீட்சையும் நடைபெறுமென பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளதாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி எஸ். ஆர்.சத்தியேந்திரா தெரிவித்துள்ளார்.

அத்துடன் முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாடவேண்டியுள்ளதால் கல்லூரியின் முதலாம், இரண்டாம் வருட மாணவர்களை எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (ஓ-8)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



பேராசிரியர்
**ப.கோபாலகிருஷ்ண ஐயர்(J.P.)**
யாழ்.பல்கலைக்கழக இந்து
நாகரிகத்துறைத் தலைவராக இருந்து
தற்போது கலைத்துறைப் பீடாதிபதியாகப்
பதவியேற்றிருக்கும் எமது மதிப்புக்குரிய
பேராசிரியர்
**பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர்**
அவர்கள் சகல சௌபாக்கியங்களுடன் பல்லாண்டுகாலம் பணிபுரிய உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கலைப்பீட மாணவர்கள்,
யாழ்.பல்கலைக்கழகம். (95991) இரண்டாம் வருடம்.

# தேவை

தாதிப் பயிலுநராக வேலை செய்வதற்குப் பெண்கள் தேவை. வயது 18 முதல் 27வரை. விரும்புவோர் 18.12.2001 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிமுதல் 11.30 வரை நேரில் வரவும்.

- நிர்வாகம்.

"வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்,
574, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கி பிரதான கிளைக்கு அருகில்),
யாழ்ப்பாணம்." (95989)

# நன்றி நவிலல்



நடந்து முடிந்த நாடாளுமன்ற பொதுத்
தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி
வேட்பாளராகப் போட்டியிட்ட

## கா.சந்திரராசா

ஆகிய எனக்கு சகல விதத்திலும் ஆதரவு தந்து வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

என்றும் தங்கள் சேவையில்

கா.சந்திரராசா,
தமிழர் விடுதலைக் கூட்டணி.

யாழ்.மாவட்டம். (95992)

# கண்ணீர்க் காணிக்கைகள்

கலைமுதற் தேர்வு - 2001 மாணவி
செல்வி தவச்செல்வி அவர்களின் அன்புத் தந்தையார்

## சந்திரசேகரர் குமாரசாமி (எழுதுமட்டுவாழ்)

அவர்களின் மறைவினால் துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். அமரருக்குக் கண்ணீர்க்காணிக்கைகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி

மாணவர் ஒன்றியம்,
வெளிவாரிப் பட்டப்படிப்பு,
யாழ்.,பேராதனை பல்கலைக்கழகம்.

புதிய உயர்கல்லூரி,
ஆரியகுளம். (95998)

## ஸ்கிறீன் பிறின்டிங் வேலை

வண்ணப் படக்கலண்டர்களில் உங்கள் வியாபார விளம்பரம்,
திருமண அழைப்பிதழ் ஆகியவற்றுக்குக் கனனி எழுத்துக்களை
பட்டுத்துணி அச்சுப்பதிப்பு முறைமூலம் அச்சுப்பதித்திட

**பிள்ளையார் அச்சகம் (Pvt.) Ltd.**

676, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(முதல் வருபவருக்கு முன்னுரிமை அடிப்படையில் வேலை செய்து தரப்படும்.)

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் சத்தியகுமரன்

நல்லூர்,கைலாசபிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சத்தியகுமரன் 09.12.2001 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - ருக்மணி தம்பதிகளின் அன்பு மகனும் வைகுந்தகுமரன், வசந்தகுமரன், காலஞ்சென்ற உதயகுமரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், ஹரிரமேஸ்குமாரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (18.12.2001) செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

19, கைலாசபிள்ளையார்
கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
வை.வைகுந்தகுமரன் (ராதா)
(சகோதரன்). (95985)

உதயன்

## சமாதான முயற்சி சமாதி கட்டுவதா?

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சி 'சாண் ஏற முழம் சறுக்கும்' விவகாரமாகவே இருந்து வருகின்றது.

தேர்தல் முடிந்துவிட்டது. சமாதானப் பேச்சுக்கு மக்களின் ஆணை கிடைத்துவிட்டது. சமாதானக் குரல் எழுப்பிய புதிய அரசு பதவியேற்றுவிட்டது. இனி என்ன? சமாதான முயற்சிகள் முடுக்கிவிடப்படும் என்றெல்லாம் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

ஆனால் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய கதையாக இலங்கை அரசு புதுடில்லியின் காலில் போய் விழுவதற்கு ஆயத்தமாகிக்கொண்டிருக்கின்றது.

பதவியிழந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் ஆட்சிக் காலத்திலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

முரண்பட்டு நிற்கும் இலங்கை அரசுத் தரப்பையும், விடுதலைப் புலிகளையும் பேச்சு மேசைக்குக் கொண்டுவரும் அனுசரணையாளர் பொறுப்பு நோர்வேயிடம் ஒப்படைக்கப்பட்டது. மூன்றாம் தரப்பு அனுசரணையாளராக நோர்வேயை புலிகள் இயக்கமும் இலங்கை அரசும் ஏற்றுக்கொண்டமை சமாதான முயற்சியில் மிகமுக்கிய முன்னேற்றம் என அப்போது கருதப்பட்டது.

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இருதரப்புக்கும் இடையில் மாறிமாறி ஓடித்திரிந்து பேச்சு நடத்தியபோது தீர்வு முயற்சியில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகவும் கருதப்பட்டது.

நோர்வேயின் சமாதான முயற்சிகளைக் குழப்புவதில் நமது அண்டை நாடு ஒன்று உட்பட சில சக்திகள் அளவுக்கு அதிகமாக தலையீடு காட்டுவதாகச் செய்திகள் வெளியாகிக்கொண்டிருந்த சமயத்தில்தான் -

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மை அந்த முயற்சியில் இருந்து ஓரங்கட்ட முயன்றது சந்திரிகா அரசு. அதன் விளைவாக சமாதான முயற்சிகள் தடைப்பட்டுப் போனது நமக்குத் தெரிந்த கதை.

கணிசமான முன்னேற்றம் கண்ட சமாதான முயற்சிகளை நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மை ஓரங்கட்டியதன் மூலம் சந்திரிகா அரசு கருகச் செய்ததென்றால், ரணிலின் புதிய அரசோ நோர்வேயின் பங்களிப்பையே முழுதாக ஓரங்கட்டி, புதிய சமாதான முயற்சிகளுக்கான வாய்ப்பை முளையிலேயே கருகச் செய்ய நடவடிக்கை எடுக்கின்றதுபோலப்படுகின்றது.

இலங்கையின் அரசுத் தலைமையில் ஆள்கள் மாறலாம். ஆனால் அரசு என்ற பிரதிநிதித்துவம் அப்படியே இருக்கும். அந்தப் பொறுப்பு சந்திரிகாவின் கட்டுப்பாட்டிலோ, ரணிலின் தலைமையிடமோ அல்லது வேறு ஒருவரிடமோ மாறலாம்.

யார் வந்தாலும், போனாலும் சமாதான முயற்சிகள் விட்ட இடத்தில் இருந்துதான் தொடரப்படவேண்டும். இடைநடுவில் அந்தரத்தில் இருந்து ஆரம்பிக்கமுடியாது.

எனவே, இப்போதும் சந்திரிகா தலைமையிலான பொ.ஐ.மு. அரசு சமாதானப் பேச்சு முயற்சியை எங்கு கைவிட்டதோ அங்கிருந்துதான் அதனைத் தொடங்கவேண்டும். அதை விடுத்து மீண்டும் ஆரம்பத்திலிருந்து தொடங்குவது வீண் காலதாமதத்தைத்தான் ஏற்படுத்தும்.

இனப்பிரச்சினை விவகாரத்தில் மூன்றாம் தரப்பு அனுசரணையாளராகவோ அல்லது ஏற்பாட்டாளராகவோ அல்லது மத்தியஸ்தராகவோ பங்கு பணியாற்றக்கூடிய எந்தத் தரப்பும் இந்த விடயத்தில் நேரடியாகச் சம்பந்தப்படாத நடுநிலை நாடாக இருக்க வேண்டும் என்று எப்போதோ திட்டவட்டமாகப் புலிகள் அறிவித்துவிட்டனர்.

இந்த நிலையில், புலிகளுடன் தொடர்புகொண்டு ஓர் இணக்கம் காணப்படாத நிலையில், மூன்றாம் தரப்பு அனுசரணையாளர் நிலையில் இருந்து நோர்வேயை ஓரங்கட்டுவதற்கும் அந்தப் பணிக்கு இந்தியாவுக்கு வெற்றிலை வைப்பதற்கும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளுக்கு சமாதிகட்டும் செயல்களாகவே அமையும் என்பதை ரணிலின் அரசு உணர்ந்துகொள்ளவேண்டும்.

இலங்கை விவகாரத்தில் அதிகப்பிரசங்கித்தனமாக மூக்கை நுழைத்து, அமைதிப்படை என்ற பெயரில் லட்சத்துக்கும் அதிகமான துருப்புக்களை இலங்கைத் தமிழர் தாயகத்துக்குள் ஆக்கிரமிக்க வைத்து, புலிகள், இலங்கை அரசு ஆகிய இருதரப்பினரால் மட்டுமல்லாமல் முழு இலங்கை மக்களாலுமே கசப்புணர்வோடு இங்கிருந்து வெளியேற்றப்பட்டது இந்தியா.

அந்த நாட்டை மீண்டும் அனுசரணையாளர் என்ற பெயரோடு சமாதான முயற்சிகளில் தலையிடச் செய்யவைக்கும் இலங்கை அரசின் ஒருதலைப்பட்ச நடவடிக்கை. ஆக்கபூர்வமான போக்குக்கு வழிவகுக்கமாட்டாது என்பதை அரச உயர்பீடத்தில் இருப்போர் உணர்ந்துகொள்ளவேண்டும்.

## இன்றைய தொழில்நுட்ப உலகில் தட்டச்சு, கணனி, ஆங்கிலத்தில் புலமையுள்ளோர் வெற்றியடைவர்

### வங்கி அதிகாரி வலியுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.16

இன்றைய தகவல் தொழில்நுட்பக் கல்வி உலகில் தட்டச்சு, கணனி, ஆங்கில அறிவுடையவர்கள் வாழ்க்கையில் வெற்றிபெறுவது சுலபம்.

இவ்வாறு தெரிவித்தார் மக்கள் வங்கியின் வட வலய உதவிப் பொது முகாமையாளர் சி.இளம்பிறைநாதன். வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தால் அண்மையில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் நடத்தப்பட்ட கழகத்தின் 16ஆவது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கழகத் தலைவர் சி.குலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் க.வ.சிவச்சந்திரதேவன் எழுதிய "சுருக்கெழுத்து, தட்டச்சு தொழில்நுட்பக்கலை வரலாறு"என்ற நூல் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் கழகத்தின் 14ஆவது அணிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

அங்கு உரையாற்றிய சி.இளம்பிறைநாதன் மேலும் கூறியதாவது:-

சுருக்கெழுத்து, தட்டச்சுப் பயிற்சி பெற்றவர்கள் கணனிப் பயிற்சியைப் பெறுவது இலகுவாக இருக்கும். இன்றைய உலகில் அனைவரும் தட்டச்சு, கணனி, ஆங்கிலம் போன்றவற்றை அறிந்திருப்பது அவசியமாகின்றது. இத்துறைகளில் மாணவர்கள் ஆர்வம் கொண்டவர்களாக இருப்பின், அவர்கள் இலகுவாக வாழ்க்கையில் வெற்றியடைய முடியும்.

இவ்வாறு அவர் கூறினார். (ஒ-9)

## பிணைத் தொகை மீளளிப்பு

தென்மராட்சி,டிசெ.16

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் பிணைத் தொகையாக பின்வருவோரால் வைப்புச்செய்யப்பட்ட பணம் மீளளிக்கப்படவுள்ளதால், பருத்தித்துறை நீதிமன்றக் கட்டத்தில் இயங்கும் சாவகச்சேரி நீதிமன்றுடன் அவர்களைத் தொடர்புகொள்ளுமாறு நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

சாவகச்சேரியைச் சேர்ந்த மனோகரன் விமலாதேவி, சரசாலை வடக்கைச் சோந்த சிவப்பிரகாசம் குமாரசாமி, சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த நா.க.சுப்பிரமணியம் ஆகியோர் நீதிமன்ற அலுவலக நேரத்தில் பணத்தினை மீளப்பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)

## 'ஐ.ரீ.பார்க்' மாணவர்களுக்கு!

யாழ்ப்பாணம்,டிசெ.16

தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் சான்றிதழ் கற்கை நெறிகளில் பயில்கின்ற 2ஆவது பிரிவு மாணவர்களுக்கான பரீட்சைகள் யாவும் அடுத்த வருடம் ஜனவரி மாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ளதாகவும் -

எனவே முதலாவது பிரிவில் பரீட்சைக்குத் தோற்றாத மாணவர்களையும், தோற்றிச் சித்தியடையத் தவறியோரையும் எதிர்வரும் ஜனவரி மாத முதல் வாரத்தில் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு தமது பரீட்சைக்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறும் தகவல் தொழில்நுட்பப் பூங்காப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஒ-8)

## நாட்டு நடப்பு

மாணவரும் மண்ணெண்ணையும்

கண்ணெனும் கல்வி கற்று
களிப்புடன் சோதனைக்கு செல்ல
எண்ணம் போல் விளக்கேற்றி
இரவெலாம் கல்வி கற்க
மண்ணெண்ணை வாங்க எங்கள்
மாணவர் படும்பாட்டையெண்ண
உண்மையில் உளம் வெடித்து
உதிரமே கொட்டும் அன்றோ

வண்ணமாய் இளைஞர் ஒன்றாய்
வாக்கையே வாரி நல்க
கொண்டு வந்து கப்பல் முட்ட
கொட்டுவோம் எல்லாம் என்றார்
எண்ணையும் மாவும் இன்றியெல்லோ
இளைஞர்கள் பசியோடு வாட
மண் எண்ணெய் தராத அரசு
மாநிலம் தருமோ ஒப்பு?

*- விகடகவி.*

## மாணவர் சேமிப்புக் கணக்குகளுக்கு மாதாமாதம் வட்டி வழங்கத் திட்டம்

### மக்கள் வங்கி அறிமுகப்படுத்துகிறது

யாழ்ப்பாணம்,டிசெ.16

மக்கள் வங்கியின் மாணவர் மலர்ச்சி சேமிப்புத் திட்டத்தில் கணக்கு வைத்திருக்கும் மாணவர்களுக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் கணக்கில் உள்ள வைப்புத் தொகைக்கு மாதாமாதம் வட்டி கணக்கிடப்பட்டு அந்தத் தொகை கணக்கில் வரவு வைக்கப்படும் புதிய நடைமுறை ஒன்றினை மக்கள் வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது என மக்கள வங்கியின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுவரைகாலமும் மாணவர்களது சேமிப்புக் கணக்கில் உள்ள பணத்திற்கு வருட இறுதியில் வட்டி கணக்கிடப்பட்டுவந்தது. ஆனால் புதிய நடமுறையினால் மாணவர்களது சேமிப்புக் கணக்கில் உள்ள பணத்துக்கு ஒவ்வொரு மாதமும் வட்டி கணக்கிடப்பட்டு, வட்டித் தொகை கணக்கில் சேர்க்கப்படுவதால் வட்டிக்கு வட்டி பெறக்கூடியதாகவுள்ளது.

மாணவர்கள் சேமிப்புப் பரிசுத் திட்டம் ஒன்றையும் மக்கள் வங்கி அறிமுகப்படுத்தவுள்ளது.

ஒரு மாணவனின் சேமிப்புக் கணக்கில் ஆயிரம் ரூபா வைப்பில் இருந்தால் 30 ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களும் -

5 ஆயிரம் ரூபா இருந்தால் 150 ரூபா மதிப்புள்ள பாடசாலை உபகரணங்களும் -

10 ஆயிரமாக இருக்கும்போது 300 ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களும் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன.

மாணவர்கள் பாடசாலை விடுமுறை நாள்களில் நேரடியாக வங்கிக் கிளைகளில் சேமிப்பு நடவடிக்கையினை மேற்கொள்ளமுடியும் எனவும் மக்கள் வங்கி அறிவித்துள்ளது. (ஒ-180)

## வடமராட்சியில் மாற்றப்பட்ட ஜீ.சீ.ஈ. பரீட்சை நிலையங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.16

எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான வடமராட்சிப் பரீட்சை நிலையங்கள் சில இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளன.

வடமராட்சிக் கல்வி வலயத்தில் யா/செம்பியன்பற்று அ.த.க.பாடசாலைப் பரீட்சை நிலையம் யா/புற்றளை மகா வித்தியாலயத்திற்கும் -

யா/அம்பன் அ.மி.த.க.பாடசாலைப் பரீட்சை நிலையம் யா/குடத்தனை அ.த.க. பாடசாலைக்கும் -

யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய பரீட்சை மண்டப இலக்கம் 3 யா/சென்.தோமஸ் றோ.க.பெ. பாடசாலைக்கும் -

மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் யா/வேம்பொடுகேணி அ.த.க.பாடசாலை மாணவர்களுக்கான பரீட்சை மண்டபம் யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதென யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா அறிவித்துள்ளார்.(ஒ-8-118-15)

## சிவத்தமிழ்ச் செல்வி பிறந்தநாளுக்கு சமூக நல அமைப்புகளுக்கு நிதியுதவி

யாழ்ப்பாணம்,டிசெ.15

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 77ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இம்முறையும் பல்வேறு அமைப்புக்களுக்கு அறக்கொடை வழங்கப்படவுள்ளது. அவரது பிறந்த தினமான எதிர்வரும் ஜனவரி மாதம் 7ஆம் திகதி தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் இடம்பெறும் விசேட பூசை ஆராதனைகளைத் தொடர்ந்து அறக்கொடை வழங்கும் நிகழ்வு இடம்பெறும. இந்த வைபவத்தில் - உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

துர்க்காதேவி ஆலயத்தின் தென கிழக்குப் பகுதியில் அமைக்கப்பட்ட ஆய்வு நூலகம் ஒன்றும் அன்றைய தினம் திறந்து வைக்கப்படவுள்ளது.

வழங்கப்படவிருக்கும அறக்கொடைகள் பற்றிய விவரங்கள் வருமாறு:-

- மல்லாவி ஆஸ்பத்திரிக்கு மருந்து கொள்வனவுக்காக எழுபத்தையாயிரம் ரூபா.
- கண்சத்திர சிகிச்சைக்குஉள்ளான ஏழைநோயாளிகளுக்கான சத்துக்குளிசை கொள்வனவுக்கென மானிப்பாய் அரிமாக் கழகத்துக்கு முப்பதினாயிரம் ரூபா.
- தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த ஜீ.சீ.ஈ. சாதாரண தர மாணவர்கள் 150 பேருக்கு கல்வி உபகரணக் கொள்வனவுக்கென தலா 400 ரூபா.

சிவத்தமிழ்ச் செல்வியின் பிறந்த நாள் அறக்கொடை நிதியின் வட்டிப் பணத்தில் இருந்து இந்த நிதியுதவிகள் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-7)

## தொழில்சார் அமைப்பு ஒன்றியம் வடமராட்சிப் பகுதியில் தொடக்கம்

வடமராட்சி,டிசெ.16

வடமராட்சிப் பிரதேசத்தில் தொழில்சார் அமைப்புக்களின் ஒன்றியம் ஒன்று எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அல்வாய் கிழக்கு சதா 'பொன்ஸ்' கல்வி நிலையத்தில் அமைக்கப்படவுள்ளது.

வதிரி புலவராவோடையில் தொழில்சார் அமைப்புக்களின் பிரதிநிதிகள், நலன்விரும்பிகள் ஒன்றிணைந்து நடத்திய கலந்துரையாடலில் சமகால விடயங்கள் ஆராயப்பட்டன.

தொழில்சார் அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றுபட்டு ஓரணியாகச் செயற்படவேண்டும் என்றும் -

இதுவே இன்றைய காலகட்டத்தின் தேவை எனவும் - அப்போது வலியுறுத்தப்பட்டது.

அத்துடன் தொழில்சார் அமைப்புக்களின் பிரச்சினை மற்றும் தேவைகளை ஆராய்ந்து ஆவணப்படுத்தி அவற்றை முழுமையாக நிறைவேற்றும் நடவடிக்கைகளில் கூட்டாக ஈடுபடுவதை நோக்கமாகக் கொண்டு தொழில்சார் அமைப்புக்களின் ஒன்றியம் உருவாக்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

அத்தீர்மானத்துக்கமைய தொழில்சார் அமைப்புக்களின் ஒன்றியம் அமைக்கப்படவுள்ளது. இக்கலந்துரையாடலில் வடமராட்சி வர்த்தக சங்கங்களின் இணையம், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், வடமராட்சி தெற்கு, மேற்கு விவசாயிகள் சம்மேளனம், தமிழர் ஆசிரியர் சங்கம் உட்பட பல அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.(ஒ-173)

## குடாநாட்டுக்கு உரங்களை எடுத்துவர தீவிர நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.16

யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு தேவையான உரவகைகள் கையிருப்பில் இல்லாத காரணத்தினால் ஆயிரம் மெற்றிக்தொன் யூரியா உரத்தினை கொழும்பில் இருந்து எடுத்துவர யாழ்.மாவட்ட கமநல சேவைத்திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

தற்போது நெற்செய்கை போகம் முடிவடைந்திருப்பினும் ஜனவரி மாதம் தொடக்கம் மேட்டுப்பயிர்ச் செய்கையில் வெங்காயம், காய்கறிகள் பயிரிடுவதில் விவசாயிகள் கூடிய கவனம் செலுத்தும் வாய்ப்பு உள்ளதாகவும் -

அதற்காக அதிகளவு உரவகைகள் தேவைப்படுவதாகவும் -

கூறப்படுகிறது.

கமநலசேவைத் திணைக்களத்திடம் தற்போது 250 மெற்றிக்தொன் யூரியா மட்டுமே உள்ளதால், மேலதிகமாக உரங்களை கொழும்பில் இருந்து எடுத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கமநல சேவைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அடுத்த ஆண்டு தொடக்கத்தில் உரங்கள் தேவைப்படும் நிலையில், போக்குவரத்துக் காரணங்களால் கொழும்பிலிருந்து உரங்களை குடாநாட்டுக்கு கொண்டுவருவது தாமதமாகக் கூடும் என்று கவலை தெரிவிக்கப்பட்டது. (ஒ-180)

## நாளை

மார்கழி 02
திங்கட்கிழமை
திதி : திருதியை
பின்னிரவு 4.26 வரை.
நட்சத்திரம்: பூராடம்
காலை 6.37 வரை.
றம்ழான் பெருநாள்
சுபநேரம் : 12.22 - 1.52
ராகுகாலம் : 7.52 - 9.22
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

நீங்கள் சிங்கமாகவே இருக்கலாம். ஆனால் நரிகளின் துணை இல்லாமல் நரியுடன் மோதாதீர்கள்.

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 - 06 - 1946



மறைவு 06 - 01 - 1992

## அமரர் வீரகத்தி சிவலிங்கம்

*(உதவி அரசாங்க அதிபர் - A.G.A)*

ஆண்டுகள் பத்து அகன்றோடிப் போனாலும்
ஆறாத நெஞ்சத்தின் துயர் சூழ இருக்கின்றோம். இங்கே
பாசம் பரிவு அன்பு வடி வான நீங்கள்
பறந்தது வருத்திடப் பதறியே நொந்தோம்
அறமான வாழ்வினை ஏற்றிட்ட நீங்கள்
அரனாரின் அடி சேர்ந்து அமைதியைக் காண்க.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும்*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*


"ராஜஸ்தான்" *கிழவி தோட்டம், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.*

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், உற்றார், உறவினர்.

(95861)

# 2ஆம் வருட நினைவலைகள்

தோற்றம் 21 - 05 - 1953



மறைவு 10 - 12 - 1999

## அமரர் தில்லைநாதன் கதிர்காமநாதன்

*(கனிஷ்ட நூலகர், யாழ். இந்துக் கல்லூரி)*

ஆனதோ? ஆண்டு இரண்டு
ஆறுமோ எங்கள் நெஞ்சு?
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*இல. 7,சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.* (95942)

- மனைவி, தாயார், சகோதரர்கள்.

# 39ஆம் நாள் நினைவலைகள்



## அமரர் கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

*(சுவாசாசய நிவாரண சிகிச்சையாளர், அமெரிக்கா - சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக்கழக ஸ்தாபகரும், ஆரம்பகாலத் தலைவரும்.)*

அன்னையின் மடியில் ஆண்டவன்மலர்ப் பாதங்களில்
28-06-1937 08-11-2001

அன்பின் திருவுருவே!
தர்மத்தின் பிறப்பிடமே!
பாசத்தின் உறைவிடமே!
எங்கள் குடும்பத்தின் தீபமே!
நாள்கள் மறைந்தாலும்
மாதங்கள் நகர்ந்தாலும்
ஆறாது எம் சோகம்
அகலாது உம் நினைவு.

எங்கள் துக்கத்தில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் இளைஞர் முன்னேற்றக் கழகத்தினருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*பிள்ளையார் கோயிலடி, சித்தன்கேணி.* (95866)

பிரிவால் துயருறும்: தாய், சகோதரர்கள்.

## இந்து சமய நிறுவன பாராட்டு விழா

யாழ்ப்பாணம்,டிசெ.16

இந்து சமய நிறுவனங்கள் ஒன்றிணைந்து நடத்தும் வரவேற்பு விழாவும், பாராட்டு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரம்மஸ்ரீ ப.மனோகரக்குருக்கள் தலைமையில் மாலுசந்தி விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக பருத்தித்துறை மாவட்ட நீதிவான் அ.பிறேம்சங்கர் கலந்துகொள்கிறார்.

இவ்விழாவில் சர்வதேச இந்து மத குருபீடாதிபதி பிரம்மஸ்ரீ ஐ. மகேஸ்வர சிவாச்சாரியார், யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபால கிருஸ்ணஐயர் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (ஒ-8)

## சண்டிலிப்பாயில் மனையியல் பயிற்சி வகுப்பு

நவாலி,டிசெ.16

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வலி.தென்மேற்கு பிரதேச செயலகத்தில் நடத்தப்பட இருக்கும் 2002ஆம் ஆண்டுக்கான ஒரு வருட தையல், மனையியல் டிப்ளோமா பயிற்சி நெறிக்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறியில் சேர்ந்து கொள்ள விரும்புபவர்கள் 18 வயதைப் பூர்த்தி செய்திருப்பதுடன் க.பொ.த. சாதாரணதரம் வரை கல்வி பயின்றவராகவும் சண்டிலிப்பாய் பிரதேச எல்லைக்குள் வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும். பயிற்சிக் காலத்தின் போது ஊக்குவிப்புப் பணமும் வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் யாவும் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு கிடைக்குமாறு அனுப்பி வைக்கப்படவேண்டும் என்று பிரதேச செயலர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (ஒ-100)

## நல்லூரில் இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,டிசெ.16

நல்லூர் லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவமுகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் திருநெல்வேலி சத்தியசாயி சேவா இல்லத்தில் நடைபெறுகிறது.

லயன் டாக்டர் ஜி.பிரதாப்குமார், லயன் டாக்டர் கே.லோகநாதன் மற்றும் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் ஆகியோர் அடங்கிய மருத்துவக் குழு மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ளும்.

லயன் டாக்டர் ஜே.ஏ.எஸ்.பெர்னாண்டோ கண்பரிசோதனையை மேற்கொள்வார். (ஒ-8)

## தீவக கல்வி வலய ஆசிரியர்களுக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.16

தீவகக் கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான செயலமர்வு ஊர்காவற்றுறைக் கோட்டக் கல்வி அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 19ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தச் செயலமர்வில் தரம் 3இற்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் தவறாது சமுகமளிக்குமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். (ஒ-6)

## சிறையில் உள்ள மாணவர் பரீட்சை எழுத அனுமதி

யாழ்ப்பாணம்,டிசெ.16

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இருமாணவர்கள் எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் தோற்றுவதற்கு யாழ்.நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நடராசா அகிலகுமார் மற்றும் சிவகுமாரன் சுகிந்தன் ஆகிய இருவருக்குமே பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் சிறைச்சாலையில் இருந்து பரீட்சை நடைபெறும் தினங்களில் அவர்களுக்கான பரீட்சை நிலையங்களுக்கு சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் அழைத்துச் செல்லப்படுவார்கள். (ஒ-10-8)


*வணிகப் பிரமுகர்களே!*

மேலும் மேலும் உங்கள் பெயர், விலாசங்களை 2002ஆம் ஆண்டுக்கான கலண்டர் மூலம் ஊர்ஜிதம் செய்யுங்கள்.

எங்களிடம் நம்.1 வகைவகையான வண்ண வண்ண றோல் கலண்டர்களும் மற்றும் அழகிய மனேஜ்மன்ற் டயறிகளும் டெஸ்க் டயறிகளும் விற்பனைக்கு வந்துவிட்டன. கலண்டர்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்:

**சிவா நறுமணப் பூங்கா**

288, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். T.P. - 021-2567

*குறிப்பு:-*
மொத்தமாகக் கொள்முதல் செய்வோருக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
எங்கள் காட்சியறையில் வந்து பாருங்கள்!
வண்ண வண்ண அழகிய கலண்டர் வகைகளை!! (95858)


# சேவைநலன் பாராட்டு



## திரு.வி.கே.பாலசுப்பிரமணியம்

*(உதவிக் கல்விப் பணிப்பாளர்)*

தனது 60ஆவது அகவையில் இன்று ஓய்வுபெறும் திரு.வி.கே.பாலசுப்பிரமணியம் அவர்களது அளப்பரிய சேவையைப் பாராட்டுவதோடு, அவர் பல்லாண்டு காலம் சீருஞ் சிறப்புடனும் வாழப் பிரார்த்திக்கின்றோம்.

அலுவலர்கள், தென்மராட்சி கல்வி வலயம்.

(C-19727)

# எங்கள் இதய தாரகை கவிதாவின் 21ஆவது பிறந்த தின நினைவலைகள்

மண்ணுக்கு 16 - 12 - 1980



விண்ணுக்கு 02 - 09 - 1997

## 16-12-2001

## செல்வி சின்னையா கவிதா

*எங்கள் நெஞ்சில் குடி இருந்த தங்கம் கவி! இன்று நீ ஓரிடம் நாம் ஓரிடம். காலம் செய்த கோலத்தினால் நீ எட்ட முடியாத தூரத்தில் பறந்து சென்று விட்டாய். ராசன் இனி என்றுமே ஒன்று சேரும் வாய்ப்பு இல்லை. அம்மா உனக்குத் திருமண காலம். அம்மா கவி இன்று உன்னை நினைத்து 21ஆவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றோம். ராசன் இன்று எம்முடன் வாழ்ந்திருந்தால், திருமணம் செய்து பார்த்து மகிழ்ந்திருப்போம்.*

*ராசா உன்னை எங்கள் உயிர் இருக்கும் வரை மறக்கமாட்டோம். கவி மார்கழியில் பூத்தவள் நீ. மதியப் பொழுதில் மின்னாமல் முழங்காமல் விழுந்ததோர் பேரிடி. உன்னை நினைந்துருகும் அன்பு*

*உறவுகள்:*

| | |
|---|---|
| அப்பா அம்மா : | சின்னையா - சரஸ்வதி, |
| அண்ணாமார் : | திருமாறன், திருமாவளவன் (சுவிஸ்). |
| அக்காமார் : | திருமலர் (சுவிஸ்), திருமகள், திருவளர்ச்செல்வி (ஜேர்மனி). |
| மைத்துனர்மார் : | நவநீதன் (சுவிஸ்), ரூபன், தெய்வேந்திரா (ஜேர்மனி). |
| பெறாமக்கள் : | திவாகர், சிவண்யா, பானுஜா (சுவிஸ்), கயோல் (ஒலியர்), ஆதவன் (ஜேர்மனி). |
| மருமக்கள் : | கவின்சனா (சுவிஸ்), ஆகாஸ், ஆதவன் (ஜேர்மனி). |

*தி.சின்னையா (தந்தை)*
*"கவிதாலயம்"*
*நொத்தாரிஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(95916)

### மழைகாலம் ஆரம்பித்ததையடுத்து

# குடாநாட்டில் வேகமாகப் பரவும்

# மலேரியா, நெருப்புக்காய்ச்சல்!

## தடுப்பூசிக்கோ தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.16

அண்மைக் காலமாக குடாநாட்டில் மலேரியாக் காய்ச்சல் மற்றும் நெருப்புக் காய்ச்சல் ஆகியவை வேகமாகப் பரவி வருவதாக வைத்தியசாலை வட்டாரங்களின் புள்ளி விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

குடாநாட்டில் பெய்த மழையினால் உயரம் குறைந்த பகுதிகளில் தேங்கிநிற்கும் வெள்ளத்தால் நுளம்புப்பெருக்கம் அதிகரித்துள்ளதாகவும் -

அந்த நுளம்புகள் மூலமாகவே இந்த வகைக் காய்ச்சல் வேகமாகப் பரவி வருவதாகவும் -

வைத்தியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மலேரியா மற்றும் நெருப்புக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான பொதுமக்கள் குடாநாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளிலும், மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளிலும் இந்த வகை நோய்கள் அதிக அளவில் பரவி வருவதும் கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை -

நெருப்புக் காய்ச்சலை கண்டறிவதற்கான இரத்தப் பரிசோதனைக்குப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருள்களுக்கும், சிகிச்சைக்கான தடுப்பூசி மருந்துக்கும் குடாநாட்டில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளில் தட்டுப்பாடு நிலவுகிறது.

குடிதண்ணீரைச் சுத்தப்படுத்தப் பயன்படுத்தப்படும் குளோரினுக்கும், நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படும் மலத்தியோனுக்கும் தட்டுப்பாடு நிலவுவதால் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே தடுப்புப் பணிகள் நடைபெற்று வருவதாகவும்-

இவற்றைக் கவனத்தில் எடுத்து பொதுமக்கள் தமது பகுதியை துப்புரவு செய்து நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துமாறும் -

சுட்டாறிய நீரைப் பருகுவதன் மூலம், இந்த நோய்கள் பரவுவதைக் குறிப்பிட்ட அளவில் கட்டுப்படுத்த முடியும் எனவும் -

வைத்தியசாலை வட்டாரங்கள் அறிவித்துள்ளன.(ஒ-6-15-117-139-185)

### தேசியப் பட்டியலை நிராகரிக்கக் கோரி

# பட்டி தாக்கல் செய்த மனுவை நீதிமன்று விசாரணைக்கு ஏற்றது

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியலை நிராகரிக்கக் கோரி முன்னாள் அமைச்சர் பட்டி வீரக்கோன் தாக்கல் செய்த மனு விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

மனு மீதான விசாரணை அடுத்த மாதம் 15ஆம் திகதி கொழும்பு நதி மன்றில் நடைபெறும்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தனது அங்கத்துவக் கட்சிகளுடன் செய்துகொண்ட உடன்படிக்கைககு எதிராகவே தேசியப்பட்டியலைத் தயாரித்திருக்கிறது. என்று பட்டி வீரக்கோன் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மனுவில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலர், தேர்தல் ஆணையாளர், தேசியப்பட்டியலில் உள்ள ஏனைய பதினொரு உறுப்பினர்கள் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

முன்னைய பொ.ஐ.மு. தேசியப் பட்டியலில் இடம்பெற்றிருந்த லங்கா சமசமாஜக் கட்சித் தலைவரான பட்டி வீரக்கோன் இம்முறை கையளிக்கப்பட்ட தேசிய பட்டியலில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### வன்செயல்கள் தொடர்பாக

# ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர்மீது விரைவில் விசாரணை நடக்கும்

கொழும்பு,டிசெ.16

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரால் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் வன்செயல்கள் தொடர்பாக விரைவில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

கொலை, கொள்ளை, ஆள்கடத்தல் மற்றும் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கின்றன.

பத்திரிகையாளர் மீதான கொலை அச்சுறுத்தல், அவர்கள் மீதான தாக்குதல்கள் போன்றவற்றில் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினரே அதிகம் தொடர்புபட்டிருப்பதாகவும் -

அதற்குரிய ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாகவும் -

'ராவய' பத்திரிகை அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (க-4)

### படையினர் அனுமதி வழங்காததால்

# செங்கலடிப் பகுதி மக்களுக்கு 3 மாதமாக நிவாரணம் இல்லை!

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான செங்கலடியின் சில கிராமங்களுக்கு கடந்த 3 மாதகாலமாக நிவாரணப் பொருள்கள எதுவும் அனுப்பிவைக்கப்படவில்லை என்றும் - இதனால் இப்பகுதியைச் சேர்ந்த சுமார் மூவாயிரம் குடும்பங்கள் பட்டினியில் வாடுகின்றன என்றும் - தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 1990ஆம் ஆண்டு முதல் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் அரசாங்கத்தினால் இப்பகுதிக்கு நிவாரணப் பொருள்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

ஆனால் கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் நிவாரணப் பொருள்கள் எதுவும் அனுப்பிவைக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

நிவாரணப் பொருள்களை எடுத்துச்செல்லும் வாகனத் தொடரணிக்கு படையினர் அனுமதி மறுத்ததனாலேயே இந்த நிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது. (க-4)

# தேங்காய் விலை உயர்வினால் மாற்றுவழிகளை நாடும் மக்கள்

குடாநாட்டில் தேங்காய் விலை தொடர்ந்து அதிகரித்தே இருப்பதால், பொதுமக்கள் தேங்காய்ப் பாவனைக்குப பதிலாக மாற்றுவழிகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

குறிப்பாக நகரப்பகுதிகளில் வாழபவர்கள் தேங்காய்ப் பாலுக்குப் பதிலாக பசுப்பாலும், நிவாரணம் பெறுபவர்கள் தமக்கு வழங்கப்படும் பால்மாவை நீரில் கரைத்தும் சமையலுக்கு உபயோகப்படுத்துகின்றனர். இதனால் உணவின் சுவையில் பாரியமாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

மேலும் பிட்டுக்குத் தேங்காய்ப் பூவுக்குப் பதிலாக முருங்கையிலை, முளைக்கீரை மற்றும் சிறிதாக நறுக்கிய கோவா போன்றவற்றைச் சேர்ந்து அவித்து வருகின்றார்.

இப்படி அவித்த பிட்டு சத்து மிக்கதாக இருப்பதால்,தேங்காய் விலை குறைந்தாலும், இந்த வழியையே தாம தொடர்ந்து கடைப் பிடிக்கப்போவதாகப் பலர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தேங்காய் விலை உயர்வைப் பயன்படுத்தி, இளம் தேங்காய்கள் பெருமளவில் விற்பனைக்கு விடப்படுவதால், அதிக விலைகொடுத்து வாங்கும் மக்கள் ஏமாற்றமடைவதாகக் கூறபடுகிறது. (ஒ-133)

# இளவாலை கோவில் வீதிப்பகுதிக்கு மின்சாரம் வழங்க இழுத்தடிப்பு

## குடியிருப்பாளர்கள் விசனம்

யாழ்ப்பாணம்,டிசெ.16

இளவாலை சென்ஜேம்ஸ் கோயில் வீதிப்பகுதிக்கு மின்சார இணைப்பு வழங்க மின்சாரசபை இழுத்தடிப்புச் செய்வதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சென்.ஜேம்ஸ் வீதியில் ஏற்கெனவே மின்சார இணைப்புகள் வழங்கப்பட்டு விட்டதாகவும் -

ஆனால் அந்த வீதியிலிருந்து பொலீஸ் நிலையத்தை அண்டிச் செல்லும் கோவில் வீதிக்கு மின்சார இணைப்பு வழங்கவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சாக்குப் போக்கு கூறி வருவதாகவும் - கூறப்படுகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளின் முன்னர் கோவில் வீதிக்கு மின் இணைப்புக் கொடுக்க, பொலீஸ் நிலையத்தின் ஊடாக மின்கம்பங்கள் நடவேண்டியிருப்பதால், பொலீஸாரின் அனுமதி பெற்ற பின்னரே மின் இணைப்புக் கொடுக்கமுடியும் என்று மின்சார சபை தெரிவித்திருந்தது.

இதனையடுத்து, வலி.தென்மேற்குப் பிரதேச சபை தீவிரமுயற்சி எடுத்து, பொலீஸ் அனுமதியைப் பெறறுக்கொடுத்தது.

ஆனால் அதன் பின்னரும் மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை.

இது குறித்து பொதுமக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்ட போது, நிதி இல்லை, தேவையான உதிரிப்பாகங்கள் கொழும்பிலிருந்து வரவில்லை என்பன போன்ற காரணங்கள் கூறப்பட்டு வருகின்றன.

இளவாலையில் ஏனைய பகுதிகளுக்கு மின்சாரம்வழங்கப்பட்டு விட்ட நிலையில், கடந்த இரண்டாண்டு காலமாக சென்.ஜேம்ஸ் கோவில் வீதிப்பகுதி மக்கள் மின்சாரத்துக்காக ஏங்குகின்றனர். (ஒ-8)

### புன்னாலைக்கட்டுவனில் உ.கிழங்கு செய்கை பற்றிய கருத்தரங்கு

புன்னாலைக்கட்டுவன்,டிசெ.16

புன்னாலைக்கட்டுவன் பிரதேசத்தில் உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கை மேற்கொண்ட விவசாயிகளுக்கான கருத்தரங்கு எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய முன்றிலில் இடம்பெறும்.

மேற்படி கருத்தரங்கில் கலந்து கொண்டு பதிவுகளை மேற்கொள்ளும் உருளைக்கிழங்குச் செய்கையாளர்களது விளைநிலங்கள் விவசாய உத்தியோகத்தர்களால் பார்வையிடப்பட்டு, ஆலோசனைகள் வழங்கப்படுமென விவசாய சம்மேளனத் தலைவர் வே.மகாதேவன் தெரிவித்துள்ளார். (ஒ-133)

# குடாநாட்டு வைத்தியசாலைகளில் தாதியர் பற்றாக்குறைப் பிரச்சினை

எமது பிரதேசங்களின் வைத்தியசாலைகளில் தொடர்ச்சியாக நிலவுகின்ற பிரச்சினைகளில் மருந்துத்தட்டுப்பாடு, மருத்துவர்களின் பற்றாக்குறை போன்றவைகளைப் போல, தாதியப் பற்றாக்குறையும் தற்போது உருவாகிக் கொண்டிருக்கும் முக்கிய பிரச்சினையாகும். (இது ஒப்பீட்டளவில் தென்பகுதியை விட வடபகுதியிலேயே கூடுதலாக நிலவுகின்றது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.)

1958ஆம் ஆண்டு தாதிப் பயிற்சிப் பாடசாலை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டாலும் 1960ஆம் ஆண்டே யாழ். போதனா வைத்திய சாலையுடன் இது இணைந்து இயங்கத் தொடங்கியது. இற்றை வரை, இந்த நீண்ட 40 ஆண்டு காலப பகுதயினை நோக்கும்போது சில அவதானிப்புக்களைப் பார்க்கலாம். ஒவ்வொரு தடவையிலும் அறுபது (60) மாணவர்களைப் பயிற்சிக்குச் சேர்ப்பதற்கு இங்கு வசதிகள் உண்டு.




இதன் அடிப்படையில், 1960ஆம் ஆண்டிலிருந்து 1985ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இருபத்திமூன்று (23) தடவைகள் மாணவர்கள் பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டு பயிற்றப்பட்டு பயிற்சியை முடித்துவெளியேறியிருக்கின்றனர். இக்காலப்பகுதியில் தாதிய மாணவராகப் பயிற்சி பெற்றவர்களின் தொகை தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்து (995) ஆகும். அதாவது, ஓர் ஆண்டிற்கு சுமார் நாற்பது (40) பேர் வீதம் தாதியராக வெளியேறியுள்ளனர்.

ஆனால், 1986ஆம் ஆண்டு தொடக்கம் 2000ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பதின்மூன்று (13) தடவைகளில் நானூற்றியிரண்டு (402) மாணவர்களே தாதியராகப் பயிற்சியைப் பெற்றுள்ளனர். அதாவது, ஒரு வருடத்திற்கு இருபத்தியேழு (27) பேர் வீதம் உருவாக்கப்பட்டுள்ளனர்.

இச்சிறிய ஒப்பீடு ஓர் உண்மையைத் தெளிவாகக் காட்டுகின்றது. அது தான், முன்னைய காலத்தைவிட இப்போது தாதியராகச் சேவைசெய்ய - பணிபுரிய - விண்ணப்பிப்போரின் தொகை குறைந்துகொண்டு போவதே யாகும்.

யாழ்.போதனா வைத்தியசாலையைப் பொறுத்தவரையில், இதன் 'ஐடியல்' தாதியர் எண்ணிக்கை ஐந்நூற்றி ஒன்று (501) ஆகும். அதாவது, இத்தொகை சுகாதார அமைச்சின் திட்ட ஆளணி (PROJECT CADRE) யாழ்.போதனா வைத்தியசாலையில் கட்டாயமாக இருக்கவேண்டிய தாதியர் தொகை முந்நூற்றி எண்பத்தியிரண்டு (382). இப்போது இருப்பது இருநூற்றி ஐம்பது (250). தற்போது நூற்றிமுப்பத்திரண்டு (132) பேருக்கான இடைவெளி நிரப்பப்பட வேண்டிய இடம் இன்றும் இருக்கின்றது.

யாழ்.போதனா வைத்திய சாலைக்கே இந்நிலை என்றால் யாழ். தாதியர் பயிற்சிப் பாடசாலையை நம்பி இருக்கும் யாழ்.மாவட்டத்திலும், ஏனைய மாவட்டங்களிலும் உள்ள வைத்தியசாலைகளின் நிலைமை என்னவோ?...!... எப்படி இருக்குமோ?...!...

இந்நிலையை இரண்டு தளங்களிலே நின்று நோக்கலாம். ஒன்று தாதியப் பணிக்குப் பலர் இக்காலத்தில் பின்னடிக்கின்ற சூழலமைவு. மற்றையது தாதிய மாணவர்களைப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுப்பதில் கடைப்பிடிக்கப்படும் ஒருசில வரையறைகள் (நாட்டின் தற்போதைய சூழ்நிலை, மக்களின் புலம்பெயர்வு - இடம்பெயர்வு ஏனைய பல புதிய துறைகளின் வருகை போன்றவையும் இவ்வீழ்ச்சிக்குச் சிறு காரணிகளாக அமையலாம்).

முதலில், தாதிய சேவைக்கு பலர் முன்வராமையை நோக்குவோம். யாழ்.தாதியப் பயிற்சிப் பாடசாலைக்குக் கோரப்படும் விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படும் - தேவைப்படும் - எண்ணிக்கையை விடக் குறைவாகவே வருகின்றன. அத்துடன், ஏனைய வேலைவாய்ப்புக்கள், உத்தியோகங்களுக்கு இருக்கும் போட்டிகளும், முண்டியடிப்புக்களும் இல்லாதது ஒன்றை உணர்த்துகின்றது. அதாவது, இதனை விரும்புபவர்கள் குறைவாகவே இருக்கிறார்கள் என்பதாகும். (ஒவ்வொரு தடவையிலும் ஐந்து வீதமான ஆண்பிள்ளைகளே தெரிவுசெய்யப்படுவதால் ஏனையவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை என்பதை அறிவோம்.)

அடுத்து, இத்தாதியத் துறையினை ஏனையதுறைகளைவிடக் குறைவாகக் கணிக்கின்ற போக்கு - மனநிலை எம்மவரிடையே இருப்பது கண்கூடு. "நேஸ்சிங்கோ.... ஐயோ வேணடாம். ரீச்சிங்குக்கு றை (Try) பண்ணுவம்....!" "வேற ஒண்டும் கிடைக்கேல்லண்டா நேஸ்சிங்க யோசிபம்." "கிளரிக்கல் கிடைச்சிதெண்டால் நேஸ்சிங்க விட்டிருவன்" "நேசிங்கோ... உந்தத் தொழில் உவளுக்கு வேண்டாம்" என்று வேறு வேலைகள், தொழில் வாய்ப்புக்கள் கிடைக்காத நிலையில் இதனை விருப்பமில்லாமல் பற்றிக்கொள்ளும் நிலையுமுண்டு. நோயுற்று பல நாள்கள் சிகிச்சை பெறுவார்கள் ஆனால், தமது பிள்ளையை 'நேஸ்சிங்' படிக்க அனுமதி கிடைத்தாலும் விரும்பாத பெற்றோர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஆனால், தாதியத்தினுடை மேன்மையும், அதன் புனிதத் தன்மையும் என்ன வென்றால், நோயாளர்களைப் பராமரிக்கின்ற - நோயுற்றவர்களைத் தேற்றுகின்ற - நோவுகளை ஆற்றுகின்ற - உன்னதமான, ஒப்பற்ற பணியாகும். எனவேதான், இத்துறையில் சேவையாற்ற இளம் உள்ளங்கள் முன்வரவேண்டும். பெரியோர்கள் குறிப்பாக யுவதியரை ஊக்குவித்து, உற்சாகப்படுத்த வேண்டும்.

இரண்டாவதாக, தாதியப் பயிற்சிச் குத் தேர்ந்தெடுப்பதில் உள்ள சில வரையறைகளைக் கவனிப்போம். இப்போது ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் சித்தியடைந்தவர்களுக்கே தாதியப் பயிற்சிக்கு விண்ணப்பிக்க அடிப்படைத் தகைமை உண்டு. இதனால், விஞ்ஞானம் தவிர்ந்த ஏனைய துறைகளில் பயிலும் மாணவர்கள் இத்துறையில் பணியாற்ற மனமிருந்தும், ஆற்றல் இருந்தும் ஒன்றும் செய்யமுடியாத நிலை...! இதற்கு உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவில் கற்றவர்களே தாதியத்தைக் கற்கமுடியும் என்றால் ஏன் சுமார் பத்து, பதினைந்து வருடங்களுக்குமுன் தாதியப் பயிற்சி பெற்றவர்கள் பல துறைகளைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்கின்றார்கள். விஞ்ஞானப் பிரிவில் பயின்றவர்களை விடத் தரமாகவும், திறமையுடனும் தாதியராகப் பயின்றவர்களும், பயிற்றப்பட்டவ்களும் இருக்கின்றார்களே.

**செ.அன்புராசா**
ஆன்மகுரு,
புனித வேளாங்கண்ணி ஆலயம்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

இப்போது, தாதியத்தில் மேற்படிப்புக்கள், பட்டப்படிப்புக்கள் இருப்பதால் விஞ்ஞானப் பிரிவில் படித்தவர்கள் இவற்றைத் தொடர வாய்ப்பிருக்கிறது என்ற வாதம் முன்வைக்கப்பட்டால், இந்த ஒரு காரணத்திற்காக ஏனைய துறைகளில் பயிலும் மாணவர்களை இத்துறையிலிருந்து புறந்தள்ளுவது அவர்களுக்கான அரிய வாய்ப்புக்களை இழக்கச் செய்வதே ஆகும்.

ஆகவேதான், யாழ்.தாதியப் பயிற்சிப் பாடசாலையோடு தொடர்புடைய உயர் அதிகாரிகள் இவ்விடயத்தைக் கவனத்தில் எடுத்து இதறகான ஏதுநிலைகளை ஏற்படுத்துவது எமது வைத்தியசாலைகளில் தாதிய உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையைக் குறைக்க - நிவிர்த்தி செய்ய - உதவும்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறவிடாதீர்கள்

2002இல் மண்ணில் உங்கள் யோக பலாபலன்கள், சித்திரபானு வருஷ (2002/2003) பலாபலன்கள், அழகியல் (தரம்1-5 வரை), பொதுஅறிவு, ஆங்கிலத்தில் கட்டுரைகள் எங்கும் விற்பனையாகின்றன. V.A.சிவராசா வெளியீடு என்று கேட்டு வாங்குங்கள்.(95935)

## இலகு திருமண சேவை

1964 உத்தரட்டாதி, செவ்வாய்2, படித்த மணப்பெண்ணுக்கு அரச/தனியார் மணமகன் உள்ளூரில் தேவை. சீதனமுண்டு. உள்ளூர், வெளியூர் மணமக்கள் தேர்வுக்கு நாடுங்கள்: துரை விமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (95873)

## ஆங்கிலம்

A/L, A/L இற்குத் தோற்றிய மாணவர்கள், பல்கலை புகுமுக மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள் 20.12.01இல் ஆரம்பம். தொடர்பு: க. நாகேந்திரம் (ஆசிரியர்), இல.34/4, செட்டித்தெரு, நல்லூர். குறிப்பு: அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும். (95832)

## தவறிவிட்டது

துன்னாலை கிழக்கில் வசிக்கும் இபிரபசிங்கம் என்பவரது வி.அ.அட்டை மந்திகைக்கும் கலிகைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் திருவருள் கடையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (C-19772)

## விற்பனைக்கு

சினிமாப் பாடல்களுக்கான இசைக் குறிப்புகள் (Music Notes) (எளிய முறையில் கணனியில் ஒழுங்கமைக்கப்பட்ட ABC மற்றும் Staff Natation பாடல் வரிகளுடன்) விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு:- 49, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (95947)

நல்ல நிலையில் உள்ள மூன்று சில்லுகளையுடைய சாளி மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சு.றுவேஸ், 604, கே.கே.எஸ்வீதி, யாழ்ப்பாணம். (95842)

**Akai Box 160w (Japan) Pioneer 6 CD Audio Player National, Panasonic (Leadsonic 3800)** ஆகியன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.கருணானந்தராஜா, (ஆஸ்பத்திரி முன்பாக) கே.கே.எஸ்.வீதி, இணுவில். (C/19733)

கலர் மீன்கள், லவ் பேட்ஸ் (பச்சை, நீலம்),மோட்டர்கள் மற்றும் அழகு சாதனப் பொருள்கள், வெள்ளைக் கற்கள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 40/17, சீனியர் ஒழுங்கை, (வீரகத்திப் பிள்ளையார் கோயில் ஒழுங்கை), கலட்டி, யாழ்ப்பாணம். (95915)

12வாரங்கள் நிரம்பிய 140 Hyline Brown பேட்டுக் குஞ்சுகள் உடன விற்பனைக்கு உண்டு. அத்துடன் African Love Birdsகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: தனபாலசிங்கம், இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (95922)

SONY V.C.D. C.D MODEL M.H. C.V X 777 4400 WATTS புதியது விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 79, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். T.P No.2216 (95931)

## மணமகள் தேவை

கனடாவில் படித்துப் பட்டம் பெற்று கணனித்துறையில் (Computer) கனடா அரசாங்கத்தில் உயர் பதவி வகிக்கும் 28 வயது நிரம்பிய மணமகனுக்கு உறவினர் மணமகள் தேடுகின்றார்கள். மணமகள் 20 - 30 வயதிற்கு உட்பட்ட அழகான, பண்புடையவராக இருத்தல் நன்று. படத்துடன் முழு விவரங்களுடன் தொடர்புகொள்ளவும். பொருத்தமற்றவை திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

R/N/0579 C/o, சுடர் ஒளி,
36/2, பிரட்சிகா றோட், கொழும்பு - 06.

(C/19747)

## திருமண மண்டபமும் தங்குமிட வசதியும்

வடபகுதியிலிருந்தும் மற்றும் எந்த நாட்டிலிருந்தும் கொழும்பு செல்லும் பயணிகளுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி!

**VANIY INN லொட்ஜ்**

சகல வசதிகளுடனும் குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை புரியும் சுத்தமான, பாதுகாப்பான, அமைதியான சூழலில்.... ஒரு முறை விஜயம் செய்து பார்த்தால் உண்மை புரியும்.

No.89, Hinny Appuhamy Mawatha,
Vanrooyan Street, Colombo-13.
T.P.No.01 433182, 472582.

(95982)

14-12-2001 வெள்ளிக்கிழமையன்று பரன் பதம் சேர்ந்த எங்கள் அன்புக்கினிய

**பிரம்மஸ்ரீ பரமேஸ்வர ஐயர்** அவர்களுக்கு எங்கள்

## கண்ணீரே காணிக்கை!

பார் புகழ வாழ்ந்த எங்கள்
பரமேஸ்வர ஐயா நீவிர்
எம் கண்ணில்
நீர் சொரிய வைத்துவிட்டு நெடும் பயணம் சென்றீரோ
எம் மழலைகள் கூட
மாமா எங்கே? என்று மனம் துடித்து அழுகின்றார்கள்
இனி
உம்மைப் போலப் பெருமகனை -
உலகறிந்த உத்தமனை எப்பிறப்பிற் காண்போம் இனி?

பிரிவால் துயருறும்:
பால.முரளீதரக் குருக்கள் குடும்பம்,
வண்ணை - சாந்தையர் மடம்
விஸ்வநாத சர்மா - ஜானகி (நல்லூர்).

(95971)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

இறைச்சிக் கோழிகள் புறொயிலர், கல்பேட்ஸ் என்பன சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.227, பிறவுண் வீதி, (கலட்டிச் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம். (95929)

**Broiler** மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (95777)

இறைச்சிக்கோழி (**Broilers**) கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.15, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (95972)

புறொயிலர் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் வேண்டிய நிறையில் தினந்தோறும் மிகக்குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: லக்கி, மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (95981)

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 4 Sri Model Morris Minnor கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி ந.கனகரத்தினம், பொன்னாலை வீதி, மானிப்பாய் மேற்கு, மானிப்பாய். (95977)

## Maths, English

**O/L Cerdit Distinction** பெறுபேறடையவும் ஆண்டு 7,8,9,10 உட்பட கற்பிக்கப்படும். ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, (சிவன் கோயில் பின்புறம்), திருநெல்வேலி. (95979)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
16
-
04
-
1926



மறைவு
16
-
12
-
1999

### திருமதி சிவசுந்தரம் வனசாட்சி

**திதி: நவமி 24-12-2001**

எங்கள் அன்பின் குலவிளக்காய்
பாசத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
எங்களை வழிநடத்திய பாசமிகு தாயே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*வி.எம். றோட்,*
*பருத்தித்துறை.*
(95976)

## வாகன இலக்கங்கள் பொலீஸாரால் கண்காணிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.16

கடந்த ஓரிரு நாள்களாக யாழ். நகரின் முக்கிய சந்திகள் மற்றும் பிரதான வீதிகளில் கடமையில் ஈடுபட்டிருக்கும் பொலீஸாரினால் அவ்வழியால் செல்கின்ற சகல மோட்டார் சைக்கிள்களின் இலக்கங்களும் பதிவு செய்யப்படுகின்றன.

படையினருடன் சேர்ந்து கடமையில் ஈடுபட்டிருக்கும் இவர்கள், மோட்டார் சைக்கிள்களை மறித்து இலக்கங்களைப் பதிவுசெய்வதுடன் அவை தொடர்பான மேலதிக விவரங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்கின்றதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இலக்கத்தகடு இல்லாத வாகனங்களைச் செலுத்தியவர்கள் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். (ஒ-10)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பேராதனைப் பல்கலைக்கழகத்தில்
கல்வி பயின்று
விவசாய இயந்திரவியலில் (Agricultural Engineering) இரண்டாம்
வகுப்பில் (2nd Class)
சித்தியெய்தி நேற்று (15-12-2001)
சனிக்கிழமை நடைபெற்ற
பட்டமளிப்பு விழாவில் விருதுபெற்ற,
யாழ்ப்பாணம் 3ஆம் குறுக்குத்
தெருவைச் சேர்ந்தவரும
வேம்படி மகளிர் கல்லூரியின்
மாணவியுமாகிய

### செல்வி ஜங்கரி பரம்சோதி

B.Sc. Agri. (Hons)

அவர்களை மேன்மேலும் உயர்கல்விகள் கற்றுயர்ந்து
சீரும் சிறப்புடன் நீடூழி வாழ்கவென
மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தகவல்:
ப.பரம்சோதி,
163, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (95974)

வாழ்த்துபவர்கள்:
அப்பா, அம்மா,
சகோதரர்கள்.

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்மகிழ
1973
-
05
-
24



கண்நெகிழ
1992
-
12
-
16

அமரர்

### சச்சிதானந்தம் கிருஸ்ணகுமார் (குமார்)

*எங்கள் குடும்பக் குல விளக்கே!*
*நீ அணைந்து இன்று*
*ஆண்டுகள் ஒன்பது ஆனதுவோ?*
*ஆனாலும் எம் மனதில் உன்நினைவு*
*இன்றும் சுடர் விட்டுப் பிரகாசிக்கின்றது*
*மீண்டும் நீ வருவாயோ? என ஏங்குகின்றது.*

உனது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உன் நினைவில் வாழும்:
அப்பா, அம்மா, சகோதரர்கள்.

*அச்சுவேலி வடக்கு,*
*அச்சுவேலி.* (95973)

## மரண அறிவித்தல்கள்

### இராசரத்தினம் நேசகுமார்

சூராவத்தையைச் சேர்ந்த இராசரத்தினம் நேசகுமார் 13.12.2001 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் பவளம் தம்பதியினரின் அன்பு மகனும், அன்புக்கரசியின் அன்புக் கணவரும், தமிழரசி, மதியரசி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற தவநேசன் மற்றும் ஜெகதாசன், குகதாசன், சத்தியதாசன், நேசமலர், சரினா, மாலா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற கிருஷ்ணன் (K.K.S. சிமெந்து தொழிற்சாலை, முன்னாள் ஊழியர்) மற்றும் அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற நீலமோகன் (முன்னாள் K.C.W.) மற்றும் நீலகுமார் (சுவிஸ்), கிருஷ்ணகுமார் (ஜேர்மனி), கிருஷ்ணராசா (லண்டன்), அன்பழகன் (லண்டன்), அருள்மோகன் (திருகோணமலை), அருள்நாயகி, கிருஷ்ணராணி ஆகியோரின் மைத்துனரும், கலோஷனா தேவி, ரேவதி, விஜயகதா, ரகுதரன் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.12.2001 வெள்ளிக்கிழமை கொத்தியாலடி இந்து மயானத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மயிலணி,*
*சுன்னாகம்.* (95970)

தகவல்:
இ.அன்னம்மா (மாமி)

### திருமதி தேவநேசன் சுபத்திரா (சாந்தா)

வேலணை மேற்கு, வண்ணாம்புலத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தேவநேசன் சுபத்திரா 08.12.2001இல் ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா - கமலத்தின் பாசமிகு மகளும் தேவநேசனின் (புங்குடுதீவு) அன்பு மனைவியும், காலஞ்சென்ற கனகரத்தினம் (ஆசிரியர்), நேசமலரின் அன்பு மருமகளும், டானியல், ஜக்கிலிஸ், கபரியல் ஆகியோரின் அருமைத் தாயாரும், இந்திரபூபதி, (நியூஸ்லண்ட்), சந்திரா (மட்டுவில்), மகேந்திரா (ஜேர்மனி), விக்கினேஸ்வரன் (துணுக்காய்), சிவராசா (ஜேர்மனி), அருட்சோதி (ஜேர்மனி), வசந்தா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் நடேசபிள்ளை (மட்டுவில்), சாந்தலிங்கம் (ஜேர்மனி), சுசிலா (துணுக்காய்), ஸ்ரீமதி (ஜேர்மனி), மேரி (ஜேர்மனி), சத்தியமூர்த்தி (சோதி, ஜேர்மனி) ஆகியோரது மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (19.12.2001) புதன்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விஜிதா அரிசி ஆலை,*
*தாவடி தெற்கு,*
*கொக்குவில்.* (95966)

*தகவல்:*
நடேசபிள்ளை சந்திரா
(சகோதரி - மட்டுவில் தெற்கு)

### 6 வருடங்களாக மூடப்பட்டிருந்த

# யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறைக்கான பாதை மீண்டும் பாவனைக்குத் திறப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.16

யாழ்.போதனா வைத்தியசாலையின் பாவனைக்கு கடந்த 6 வருடங்களாக மூடப்பட்டிருந்த பிரேத அறைக்கான பாதை மீண்டும் திறக்கப்படவுள்ளது.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளினை அடுத்து வைத்தியசாலை 1995 இல் இடம்பெயர்வின் பின்னர் மீள முழுமையாக இயங்கத் தொடங்கியதிலிருந்து இப்பாதை வைத்தியசாலையின் பாவனையில் இருந்து தடுக்கப்பட்டிருந்தது.

ஆஸ்பத்திரியின் பின்பகுதியில் அமைந்திருக்கும் 512ஆவது படையணியின் தலைமைப் படைமுகாமின் பாதுகாப்புக் கருதியே இப்பாதை தடைசெய்யப்பட்டிருந்தது. இதனால் சடலங்களை, பிரேத அறையிலிருந்து வெளியே எடுத்துச்செல்வதற்காக ஆஸ்பத்திரியின் முன்பக்கப் பாதையே பாவிக்கப்பட்டு வந்தது. இதனால் ஏற்பட்ட சுகாதாரச் சீர்கேடுகள், அசௌகரியங்களைக் கருத்திற்கொண்டு ஆஸ்பத்திரி நிர்வாகம் 512ஆவது படையணி தலைமையுடன் பல தடவைகள் தொடர்புகொண்டு முறையிட்டதை அடுத்து தற்போது ஒரு சுமுகநிலை ஏற்பட்டுள்ளது.

நிர்வாகத்தின் அழுத்தத்தால், காரணத்தை விளங்கிக் கொண்ட படையணித் தலைமை, அப்பாதையைப் பாவிப்பதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

அனுமதி வழங்கியதை அடுத்து இப்பாதை பிரேத அறையில் இருந்து பிரேதங்களை எடுத்துச் செல்வதற்காகத் திறக்கப்படவுள்ளது. இது இவ்வாரத்தில் நடைமுறைக்கு வரவுள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரத்தில் இருந்து தெரியவருகிறது.

படையினரின் அனுமதி கிடைத்ததையடுத்து எதிர்வரும் வியாழக்கிழமை முதல், இப்பாதை மீண்டும் பாவனைக்கு வரும் என்றும் -

பிரேத அறையில் இருந்து 'அம்புலன்ஸ்' வாகனம் மூலம் சாரதி மற்றும் யாழ்.ஆஸ்பத்திரி சிற்றூழியர்கள் இருவர் மட்டும் சடலத்தை பொன்னம்பலம் வீதி ஊடாக எடுத்துச் சென்று இறந்தவரின் உறவினர்களிடம் ஒப்படைப்பார்கள் என்றும் -

தெரிவிக்கப்பட்டது.

(ஒ)

# சாந்தி, சமாதானம் விரைவில் மலர்ந்திட யேசுவின் பிரசன்னத்தை வரவேற்போம்

"அப்பொழுது கடவுள் ஒளி தோன்றுக என்றார். ஒளி தோன்றிற்று." (தொ.நூல் 1,3) அன்று இயற்கையை படைத்த கடவுள் இயற்கையின முதற் படைப்பாக ஒளியை உண்டாக்கினார். ஆதிகால மனிதன் இயற்கை கற்களை பயன்படுத்தி செயற்கை ஒளியைக் கண்டுபிடித்தான். விஞ்ஞானம் வளர்ந்து நிற்கும் இந்த மிலேனியத்தில் ஒளிப்பிளம்பு உண்டாக ஒளியுடன் கூடிய அதிர்வின் பின் உலகமே அழிவை நோக்கி நிற்பது கண்கூடு.

ஆனால் - இன்றைய சமுதாயத்தின் அத்தியாவசியத் தேவையும் ஒளிதான். மங்கள நிகழ்வுகளிற்கு ஒளியேற்றி நிற்பது தமிழர் பண்பாடு. மேலநாட்டிலும் ஒளிக்கென பல முன் உரிமைகள் உண்டு. மனிதன் பிறக்கும்போதும் இறக்கும் போதும் ஒளியேற்றப்படுகிறது. வேதாகமத்திலும் பல இடங்களில் ஒளி ஒளிர்வதை, ஒளி மிளிர்வதை வாசகங்களில் காணலாம்.

உலகை மீட்கும் மாபரன் அமல உற்பவ தாயின் உதரத்தில் மீட்பின் ஒளியாக உதித்தார். ஒத்தமை நற்செய்தியில் இருந்து வேறுபட்ட கருத்தைத்தரும் நற்செய்தியாளரான புனித யோவான் தமது நற்செய்தியில் "அவரிடம் வாழ்வு இருந்தது; அவ்வாழ்வு மனிதரிற்கு ஒளியாய் இருந்தது; அந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது;

## ஞாயிறு நற்பிரசாதம்

இருள் அதன்மேல் வெற்றிகொள்ளவில்லை" (யோவான் 1:4-5) அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி உலகிற்கு வந்து கொண்டிருந்தது. (யோவா 1:9) எனக் கூறினார்.

பாவ இருளில் மூழ்கி இருக்கும் உலக மாந்தரை மீட்க குழந்தை யேசு அமல உற்பவ அன்னை மூலம் உலகிற்கு ஒளியாக வந்தார் என்னும் உண்மைக்குச் சான்று கூறுகிறார்.

உலகை மீட்க தமது மகனை அனுப்பத் திட்டமிட்டபோதே, யுவக்கீனுக்கும் அன்னம்மாவுக்கும் மகளாக தேவதாயைப் படைத்தார். சந்திரனைப்போல் ரூபவதியாய், சூரியனைப் போல் இலங்குகிறவளாய், படையணியைப் போல் பயங்கரம் உறுத்துகிறவளாய் அருணோதயம் போல் எழுந்து வருகிற இவள்யார்?

"இவளே மாசில்லாமல் உற்பவித்த மரியாள். இத்தூய மரியாள் "நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்று இறைசித்தத்திற்கு தன்னை முற்றுமுழுதாக ஒப்புக்கொடுத்து குழந்தை இயேசுவை உலகிற்கு அளித்தாள்.

பழைய ஏற்பாட்டில் ஆதிப் பெற்றோரை பாவத்தில் விழுத்திய பாம்பை இறைவன் "உனக்கும் பெண்ணிற்கும் அவள் வித்திற்கும் உன் வித்திற்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையை காயப்படுத்தும். நீ அதன் குதிக்காலால் காயப்படுவாய்" (தொ.நூ.3:15) பாவம் வீழ்ந்து இயேசுவின் ஆட்சி உலகெங்கும் பரவ அன்றே இறைவன் செய்தி வெளியிட்டார்.

மாபரன் இயேசு மாட்டுத் தொழுவத்தில் சிறு குடிலில் மார்கழி மாதம் இருபத்தைந்தாம் திகதி அவதரித்தார். குழந்தை இயேசுவின் பிறப்பு விழாவை ஒளி விழாவாக உலகளாவிய ரீதியில் சாதி, மத, இன பேதமின்றிக் கொண்டாடுகிறார்கள். எங்கும் குடில் கட்டி மண்ணிற்குள் கடவுளைக்காணும் நாம் எம் மனங்களில் கடவுளை ஏற்க ஆயத்தமாக இருக்கிறோமோ? மனச்சாட்சியின் கதவுகளைத் திறந்து மனவிருப்புடன் தீமையை விடுத்து நன்மையைத் தெரிந்து வாழ்கிறோமோ?

நாட்டில் சுதந்திரம் எதிர்பார்க்கும் நாம் எல்லோரும் சமம் என்னும்

**கெலன் பெர்னாண்டோ**
பாஷையூர்.

மனித மாண்பை மதித்து உரிய சுதந்திரத்தை எல்லோருக்கும் வழங்குகிறோமோ? "வார்த்தை மனுவுருவானார் நம்மிடையே குடி கொண்டார்." (யோ 1:14) கிறிஸ்துவின் பிறப்பு கிறிஸ்மஸ் விழா வெறும் வரலாற்று நிகழ்வாக அமையாமல் எம்மை நாம் புதிய மாற்றுக் கலாசாரத்தினுள் மாற்றி எம் உள்ளங்களிலும், இல்லங்களிலும் எமது நாட்டிலும் ஒளியாகிய குழந்தை இயேசுவின் பிரசன்னத்தை வரவேற்று நிற்போம்.

ஓர் ஒளி எப்படி பல்லாயிரம் ஒளியாகப் பிரகாசிக்கிறதோ அதே போல் நாம் குழந்தை இயேசுவின் ஒளியைப் பெற்று ஒளியாக வாழ்ந்திட பெரும் குரல் எழுப்பி செபிப்போம். அப்போது நாட்டில் சமாதான ஒளி வீசும். *நன்றி:பாதுகாவலன்.*

# காலத்தின் கோலத்தைப் பதிந்தது; 'கனவுகளின் எல்லை' கவிதை நூல்

| | |
|---|---|
| *நூல்:* | கனவுகளின் எல்லை |
| *கவிஞர்:* | த.ஜெயசீலன் |
| *பக்கங்கள்:* | 78 |
| *விலை:* | 110.00 |

கவிதை ஒரு கலை. கவிதையின் அழகு வர்ணிக்கப்படும் ஒரு பொருளின் இயற்கையழகிலேயே தங்கயுள்ளது. கவிதையூடான நன்மைகள் கவிஞனுக்குரியன; சில, வாசகர்க்குரியன. இதனடிப்படையில், கவிஞன் எண்ணிய மன எண்ணம் வாசகர் உணர்வின் அடிவரை சென்று மெய்ப்பொருளை உணர்ந்து கொள்வதனூடாகவே கவிஞனின் எதிர்பார்ப்புக்களை அறிந்துகொள்ளலாம். அந்நிலையில் தாமியற்றிய சுமார் ஆயிரத்தநூறு தனித்தனிக் கவிதைகளுள் 'கனவுகளின் எல்லை' என த.ஜெயசீலன் எண்பது கவிதைகளை வாசகர்களுக்குத் தொகுத்து அளித்துள்ளார். கன்னி முயற்சியான இத்தொகுதியைக் கவிஞரின் 'கவிதைத் தொகுதி - ஒன்று' எனலாம்.

கவிஞன் என்பவனுக்கு ப்ரதிபா, வ்யுத்பத்தி, அப்யாஸம் எனும் மூன்றும் அடிப்படைகள். அவை கற்பனை, கவிதையியற்றும் ஆற்றல், கவிதா சக்தி என்றும் - நூலறிவு, உலகியல் அறிவு, புலமை, பண்பாடு என்றும் - இடைவிடாத பயிற்சி என்றும் முறையே பொருட்படும். இத்தகைய கவிஞனுக்குரிய அடித்தளமுடையோனே த.ஜெயசீலன்.

ஈழத் தமிழ் புதுக் கவிதை மரபில் மரபுசார் அடிப்படையோடு தனக்கென ஒரு தனிமுத்திரை பதித்து வரும் த.ஜெயசீலன், யாழ்ப்பாணத்து நல்லூரைச் சேர்ந்தவன். அகில இலங்கைக் கம்பன் கழகத்துள் இணைந்தவன். கம்பனின் கவிதையால் ஈர்க்கப்பட்டவன் யாழ்இந்துவின் மைந்தன். கவிஞர் கலாநிதி இ.முருகையனின் நம்பிக்கை நட்சத்திரம். தசாப்த காலங்களாக பல கவிதைகளையெழுதி வருபவன். பண்பாடுமிக்கவன், அடக்கமானவன், விஞ்ஞானப்பட்டதாரி. சிறந்த தமிழ்நடை மூலம் வாசகர் மனதைக் கவர்பவன், அருணன், தேரடிச்சித்தர், சயனொளிபவன் எனும புனைபெயர்களையுடையவன். யாழ்ப்பாணத்தில் பெரும் இக்கட்டான சூழ்நிலைகளில் பல துன்பங்களை அனுபவித்தவன். இத்தகைய அடித்தளங்கள் அனைத்துமே கவிஞனின் 'கனவுகளின் எல்லை'யில் ஏக்கத்துடன் வெளிப்படுகின்றன.

எதிர்காலச் சமுதாயத்தை, சமூகத்தை, நாட்டை, தமிழை, தலைமுறையை, தமிழினத்தைப் பற்றிச் சிந்தித்து இறந்த காலத்தோடு ஒப்புநோக்கி வருங்காலத்திற்காக ஏங்கும மனக்குமுறல்கள் பல இக்கவிதைகளூடாகத் தொனிக்கிறது. கவிஞனின குழூஉக்குறியும், தொனிப் பொருளும், வக்ரோக்தியும் கவிஞனுக்கேயுரிய தனிநடை. அவற்றினை உணர்வு ஊறிக் கற்போர் நன்குணர்வர். அவ்களை உணர்வதற்கும், கவிஞன் உணர்ந்த, அனுபவித்த பின்புலங்களே அடித்தளமமைக்கும். அப்போதே கவிஞன் எண்ணிய கரு வெளிப்படும்.

இக்கவிஞனின் காவியம், கவிதை எனும் தன்மைகள், வறுமை, துன்பம், அழிவு, இளமையில் உயிரிழப்பு, முதுமையில் வேதனை, போரிரைசல், பாரம்பரியத்தோடு வாழமுடியாமை, போரின் கோரம், அமைதியின்மை, சமாதானத்தின் தூரம், அமைதியின் வடிவம், அரசியலின் அசிங்கம், சாவின துரிதம், இளமையின் ஏக்கம் என ஒவ்வோரம்சமும் யாழ்ப்பாணத்து சமூகம் இன ஒடுக்குமுறையால் அண்மைக் காலத்தில் உண்மையாக அனுபவித்துவரும் கோலங்கள். இவற்றினை - இக்கவிதைத் தொகுதியினை - கவிஞர் ஒரேயிரவிற் படைக்கவில்லை. காலத்திற்குக் காலம் ஒரு பொருள் - கரு - கொண்டு தொகுக்கப் பெற்றவை அவை.

இவ்வாறு ஒரு பொருள கொண்டு தொகுக்கப்பட்ட தொடர் காவியமோ ஒரே பொழுதில் எழுந்த தனித் தனிக கவிதைகளோ இவைகளல்ல. இவை 'அண்மைக்கால யாழ்ப்பாண சமூகத்தின் ஒருவகை இதிகாசம்.' இவ்விதிகாசத்தின் பழைமையையும், புதுமையையின் அடித்தளத்தில் சமூக உணர்வும் கனவாகக் கவிதையில் கனக்கிறது. அவையே கவிஞன் உலாவரும் 'எல்லை காணாக் கனவு'. சமூகம்

## நூல்விசை

விழிப்படையும், உணர்வு எப்பொழுது உண்டாகும் என்பதே கவிஞனின் எல்லை.

இயற்கையில் ஈடுபாடுமிகுந்த கவிஞன், சிறந்த முருக பக்தன், மாணிக்கவாசகத்தில் ஈர்ப்புக் கொண்டவன். சமர்த்தனைத் தன்னையாளும்படி வேண்டிநிற்பவன். அவன் வேட்டை (பக்.74,75), பாதை (பக்.77,78), பெருவாழ்வு (பக்.75-77), நீயும் நானும் (பக்.72,73), காலத்திற்கு உரைத்தல் (பக்.71,72), கவிமூலம் ஆகியன மூலம் தாம் எதிர்கொள்ளும் முகங்களுக்கு தெய்வீகத்தை வேண்டி நிற்கிறார் அவர்.

*உயிர்க் கூட்டுள் உறவாடி உணர்வுக்குள் கொடியேற்றி*
*உறைகின்ற எந்தன் தலைவா!*
*'உடைக்கின்ற' நேரத்தில் உதிராமல் உனைஎண்ண*
*உதவிசெய் நல்லை முருகா*

என்றும்; 'வேட்டை'யிலே

*அற்புத அமைதியெந்தன் அகந் தன்னிற் சேர்க்காமல்...*
*ஏன் உள்ளாய்.... கைகளிலே*
*ஈட்டி, வேல், வில் கத்தியுடன்?*
*இது புரிய மறுக்குது; என்*
*மனவனத்தைப் பூந்தோட்டம்*
*எனமாற்ற வேட்டையிடு எனை;*
*நேர்த்தி தொடர்கிறது;*

என்றும் 'பெருவாழ்வு' எனும் கவிதையில்

*குடி, களவு, பொய், பொறாமை*
*அழி! ஜெயித்தால் ஆடவைக்கும்*
*ஆணவத்தைத் தறி; அடங்கிச்*
*சிறுபொழுதில் மீண்டுமெனைச்*
*சிறையெடுக்குஞ் 'சாகாவரம்' பெற்ற*
*காம அரக்கன் மேல் ஈட்டியெறி!*
*பிறன் நெஞ்சை ரணமாக்கிப் பேசின்*
*என் நா பூட்டு!*
*திரியாக்கி நரம்பாலே நட்புக்கு ஒளியூட்டு!*

என தன்னையாளும்படி வேண்டும் வேண்டுதல்கள் பல.

தனக்குத் தெய்வத்திடம் கவிபாடும வரம்வேண்டும் என வேண்டும் கனிவும்; மன உறுதியும் தனித்துவமானவை. 'உயிர்ப்பா', 'கவிமாலை', 'கவிதைப் பூமரத்தைக் கண்டுணர்க', 'அமுதூட்டு தமிழே' மூலமாக இதை உணர முடிகிறது.

**செ.பத்மநாதன்**

தாம் உணர்ந்த இயற்கையில் நிலவு, அதிகாலை, பூக்கள், காற்று, மழை என்பனவும் இசையும் கவிஞனின் மனம் கவர்ந்தவை. இவை அனைத்தும் காலத்தின் கோலத்துக்கேற்ப புதுப்பொலிவு பெறுகின்றன.

கவிஞன் தாம் உணர்ந்த வாழ்வியலில் பாரதிபோல் வேதாந்தம் பேசுகிறான். அவனது 'வாழ்க்கை', 'ஜென்ம ஈடேற்றம்', 'நிலைபேறு' என்பன பற்றிப் பேசும் அதேவேளை முக்தியை உணர்ந்து ரசிக்கின்றான். இயற்கையின் படைப்பைக் கண்டு வியக்கின்றான். விஞ்ஞானமும் மெய்ஞானமும் அவனை அலைக்கழிக்கிறது. விஞ்ஞானத்தில் விடைகாணமுடியாத கவிஞன், படைப்பாளியான பிரம்மனிடம் தனக்குவமையில்லாதானின் 'உவமை'யைச் சுட்டுகிறான்.

*"பிரமன் ஒரு பெருங்கவிஞன்*
*அவன் எழுதிப் பிரசுரித்த*
*கவிதைகளில் எனைக்கவர்ந்த மிகச்சிறந்த*
*கவிதை நீ!"*

விடைகாணாக் கனவுகளின் எல்லை தெய்வீகத்திலும் எல்லை காணாது செல்கின்றது.

பழைமை நினைவுகளை பரிதவிப்புடன் நோக்கும் கவிஞனின் மனவெளிப்பாடே அடைப்பாடு. சிதைந்து போன எம்மரபை, எமது சொத்தை நன்கு காக்காத இளம் சமூகம் எதிர்காலத்தை எப்படிச் சமைக்கும்? எனத் தொனிக்கிறது.

இயற்கையில் ஊறி தெவிட்டாத உணர்வுகளுடன்; அழகுடன்; காலத்தின் கோலத்துடன்; நற்தமிழில் காலத்தைப் பதிவு செய்கிறது த.ஜெயசீலனின் 'கனவுகளின் எல்லை.' இவனது உணர்வூறிய வினாக் கவிகள் முடிவற்ற எல்லையுடையன. காலம் இவற்றுக்குப் பதில் சொல்லும்.

★

### பொ.ஐ.மு.அதிகாரத்தில் உள்ள

# மாகாண சபைகளை வசப்படுத்த ஐ.தே.கட்சி நடவடிக்கை

கொழும்பு,டிசெ.16

தற்போது பொ.ஐ.முன்னணியின் அதிகாரத்தில் உள்ள சில மாகாண சபைகள் விரைவில் ஐ.தே.க. வசம் வந்துவிடும் என்று மேல் மாகாண சபை ஐ.தே.க.உறுப்பினர்களில் ஒருவரான சோமன்த விக்கிரம ஆராச்சி தெரிவித்தார்.

மேல் மாகாணம், வடமேல், வடமத்திய, மத்திய ஊவா, தென்மாகாணம் ஆகியவற்றின் மாகாணசபைகள் பொ.ஐ.முன்னணியினரின் கட்டுப்பாட்டில் உள்ளன.

இச்சபைகளில் உறுப்பினர்களாக உள்ள பல உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் -

இதனால் மாகாண சபைகளில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படும் வரை ஐ.தே.க.காத்திருப்பதாகவும் -

விக்கிரம ஆராச்சி தெரிவித்தார்.

வெற்றிடங்கள் நிரப்பப்பட்ட பின்னரே மாகாணசபைகளின் அதிகாரங்களைக் கைப்பற்றும் நடவடிக்கைகளை ஐ.தே.க. ஆரம்பிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ஒ)

# எதிரணி எம்.பிக்கள் மூவர் ஐ.தே.கவில் விரைவில் சேர்வர்?

கொழும்பு,டிசெ.16

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூன்று பேர் ஐ.தே.கட்சியில் இணைவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதுதொடர்பாக அந்த மூவரும் ஐ.தே.கட்சி உயர்மட்டத் தலைவர்களுடன் இரகசியப் பேச்சுக்களை நடத்திவருவதாக ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசியல் அதிகாரத்தை பொ.ஐ.முன்னணி இழந்த பின்னர் தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக இவர்கள் அஞ்சுவதாகவும் -

அதனாலேயே ஐ.தே.கட்சியில் சேர முயற்சிகளை அவர்கள் மேற்கொண்டுள்ளதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

ஆனாலும் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஐ.தே.கவுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்குடனேயே இவர்கள் அந்தக் கட்சியில் இணைய விருப்பதாகக் கூறிவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ)

### கழிவுநீர் தேங்கிக் கிடப்பதால்

# இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தொற்றுநோய் பரவும் அபாயம்!

யாழ்ப்பாணம்,டிசெ.16

பருத்தித்துறைப் பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் வாழும் முகாம்களில் மழை நீரினால் நிரம்பி வழியும் மலசலக்கூடக் குழிகளிலுள்ள கழிவுநீரினை அகற்றமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் சுகாதாரச் சீர்கேட்டினால் அங்கு தொற்றுநோய்கள் பரவும் அபாயம் தோன்றியுள்ளது.

கழிவுநீரை அப்புறப்படுத்துவதற்குப் பாவிக்கும் இயந்திரங்களை இயக்கவேண்டிய மண்ணெண்ணெய் இல்லாததாலேயே இந்த அபாயம் தோன்றியுள்ளது.

இது பற்றி அப்பகுதியில் உள்ள அரச மற்றும் பொது நிறுவனங்கள் அக்கறை காட்டாததால் இந்நிலை நீடிக்கும் அபாயமே காணப்படுவதாகவும் முகாம் மக்கள் மாத்திரமன்றி அப்பகுதியில் வசிக்கும் ஏனைய மக்களும் தொற்றுநோய்களால் பாதிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

(ஒ-15)

## சபிண்டீகரண அழைப்பு

கும்பவாழி வீரகத்தி விநாயகர் ஆலய பிரதமகுரு
சிவஸ்ரீ ச. சோமாஸ்கந்தக் குருக்கள்
அவர்களின் அன்பு மனைவி
**திருமதி பரமேஸ்வரி அம்மா**

அவர்கள் கடந்த 05-12-2001 புதன்கிழமை இறைபதம் அடைந்தார். எங்கள் குடும்பத் தலைவியான அவரது சபிண்டீ கரணக் கிரியைகள் இன்று (16.12.2001) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும்.

எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இந்த அழைப்பையேற்று வருகை தந்து கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிவஸ்ரீ ச.சோமாஸ்கந்தக் குருக்கள்
பிரதம குரு
கும்பவாழி வீரகத்தி விநாயகர் ஆலயம்.
இமையாணன்,
உடுப்பிட்டி. (C/19773)

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

கடந்த 15 வருடகால வன்செயல் அழிவுகளால் பெரும் பாதிப்புக்குள்ளான எமது நெல்லியடி ஸ்ரீ முருகமூர்த்தி காளி அம்மன் ஆலய புனரமைப்புக்காக ஒதுக்கப்பட்ட இரண்டு லட்சம் ரூபாவில் ஒரு லட்சம் ரூபாவைத் தந்துதவியவர்களான,



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
செயலாளர் நாயகமும்
முன்னாள் அமைச்சருமான
**திரு. K.N. டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி
நெல்லியடி அமைப்பாளர்
**பரஞ்சோதி ரவீந்திரன் (ராசிக்)**
அவர்களுக்கும்
எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நெல்லியடி ஸ்ரீ முருகமூர்த்தி காளி அம்மன்
(95987) ஆலய பரிபாலனசபையினர்.

### போஞ்சிவிதை விநியோகம்

யாழ்.மாவட்டத்தில் விவசாயிகளுக்கு விநியோகிக்கவென கொழும்பில் இருந்து நல்லின போஞ்சி விதைகள் யாழ்மாவட்ட கமநல சேவைத் திணைக்களத்தினால் எடுத்து வரப்பட்டுள்ளதாக கமநல சேவைத் திணைக்களத்தின் ஆணையாளர் எஸ்.சுந்தரேசன் தெரிவித்தார்.

புத்தூர், உடுவில், நல்லூர் ஆகிய கமநல சேவை நேந்திர நிலையங்கள் மூலம் இந்தப் போஞ்சி விதைகள் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ஓ-180)

### பரீட்சைத் திகதி மாற்றம்

தென்மராட்சி, டிசெ.16

அஞ்சல் திணைக்களத்தில் கடமையாற்றும் உபதபால் அதிபர்கள் மற்றும் சிற்றூழியர்களை ஒருங்கிணைந்த சேவை தொகுதி 'பி' தரம் I 'பி' உத்தியோகத்தர் பதவிக்கு சேர்ப்பதற்காக எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருந்த போட்டிப்பரீட்சை மறுநாள் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறுமென யாழ்.பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ். சுந்தரமூர்த்தி சகல அஞ்சல் அலுவலகங்களுக்கும் அறிவித்துள்ளார். (ஓ-117)

### சிகை அலங்கரிப்பாளர் தேவை

இளம் சிகை அலங்கரிப்பாளர் உடன் தேவை. திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். உடன் நேரில் வரவும்.

**மயூரா சிகை அலங்கரிப்பு நிலையம்,**
மத்திய கிழக்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம். (C/19774)

### வேலையாள் தேவை

எமது ஸ்தாபனத்துக்குத் தேநீர் தயாரித்தல் மற்றும் சமயல் வேலைகளுக்கு ஆள் தேவை. தெரிந்தவர்கள் நேரில் வரவும்.

**றிக்கோ ஹோட்டல்**
370, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (95975)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கூட்டுறவுச் சேவையில் தன்னை அர்ப்பணித்து எமது கொத்தணியின் வளர்ச்சிக்கு காலத்துக்குக் காலம் பல வகைகளிலும் சிறப்பான சேவையாற்றி கூட்டுறவுப் பரிசோதகர் முதலாம் தரத்திற்குப் பதவி உயர்வு பெற்ற எமது கூட்டுறவுப் பரிசோதகர்

**திரு.வீ.கே.அருந்தவநாதன்**
அவர்களை மனமுவந்து பாராட்டி வாழ்த்துவதுடன் –
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகப் பதவி உயர்வு பெற்றவர்களான –
**திரு.பொ.சிவலிங்கம்**
**திருமதி யோ.செல்வரத்தினம்** ஆகியோரையும் –
மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகப் பதவி உயர்வுபெற்றவர்களான –
**திரு.நா.தவநாதன்**
**திரு.செ.திருச்செல்வம்**
**திரு.கு.குமரகுருலிங்கம்** ஆகியோரையும் –
முதலாம் தர கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பதவி உயர்வு பெற்றவர்களான –
**திரு.கே.சின்னராசா**
**திரு.எஸ்.கணேசு**
**திரு.என்.யோகேந்திரராசா**
**திரு.என்.பத்மசோதி**
**திருமதி எஸ்.அழகேந்திரராசா**
**திரு.என்.சிவநாதன்**
**திரு.ரி.என்.ராசா**
**திரு.ரி.மோகன்** ஆகியோரையும் –

*பாராட்டி வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.*

வாழ்த்துபவர்கள்:
**தலைவர்,பணிப்பாளர்கள், பணியாளர்கள்**
**வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, மானிப்பாய்** (C/19761)

## திகதி மாற்ற அறிவித்தல்

T.V.வடிவேலு ஞாபகார்த்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

29-12-2001 அன்று நடைபெற இருந்த T.V. வடிவேலு ஞாபகார்த்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு G.C.E(O/L) பரீட்சை காரணமாக 05-01-2002 அன்று மாலை 4.00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றோம்.

– செயலாளர்
(C/19751) பழைய மாணவர் சங்கம்.

## நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

ஓராண்டு ஈராண்டு





**அமரர் சின்னத்துரை பத்மநாதன்**
(ஓய்வுபெற்ற உபஅதிபர் – கீரிசுட்டான் அரசு அதிபர்)
மண்ணில்: 19-01-1926 விண்ணில்: 27-12-2000

**திருமதி சரஸ்வதி பத்மநாதன்**
(ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ்/ஏரியூப்பர் மகாவித்தியாலயம்)
மண்ணில்: 21-03-1930 விண்ணில்: 08-01-2000

திதி: 15-12-2001

*பெருமை சேர் தந்தாய் - அருமருந்தாக*
*வந்துதித்த கனேந்தேனே - வாழ்வின் உயர்*
*திருவுடை அன்னை - திகழ் அன்பினிலே*
*பெரு விருந்தாயினை - பெற்றவர் மூதி*
*வருடமோ ஒன்று வந்து விழிந்தது - உங்கள்*
*உருவமோ உறைந்தனில் ஒளிர்ந்து ஒவ்வங்க*
*பாருங்கள்வியாம் என்றுமே மறவோம்*
*பரமன் திருத்தாள் இருத்தினருங்களே!*

12, மணிக்கூட்டு ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (95965)
– குடும்பத்தினர்.

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் வ.அப்பையா**

மலர்வு: 1926-04-05 உதிர்வு: 1995-12-09
திதி: 2001-12-16 ஞாயிறு
ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
– குடும்பத்தினர்.
*பழைய வீதி, கோப்பாய் தெற்கு.* (95890)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 1923 - 12 - 29



விண்ணில் 2000 - 12 - 27

**அமரர் வேலுப்பிள்ளை கோவிந்தசாமி**
(செல்லப்பாக்கியம்)

திதி: இன்று (2001-12-16) பூர்வபக்க துதியை

அன்பின் பிறப்பிடமாம் பாசத்தின் திருவுருவாய்
பண்பின் உறைவிடமாய் அல்வாயில்
பிறந்து அரியாலையில் வாழ்ந்து எமக்கெல்லாம்
வழிகாட்டியாய் இருந்து நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து
ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் நினைவு
எங்கள் நெஞ்சத்தில் என்றும் நீங்காது நிலைத்திருக்கும்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய அல்வாய் வடக்கு அரசடி விநாயகரை இறைஞ்சுகின்றோம்.

"கோகுலம்"
அல்வாய் தெற்கு, அல்வாய். (95941)
– குடும்பத்தினர்.

# சேவை நலன் பாராட்டு



## திரு.வீ.கே. பாலசுப்பிரமணியம்

(உதவிக் கல்விப் பணிப்பாளர்)

தனது 60ஆவது அகவையில் ஓய்வுபெறும்

*திரு.வீ.கே. பாலசுப்பிரமணியம்* அவர்கள் யாழ். மாவட்டத்தின் சகல பகுதிகளுக்கும் சென்று அயராதுழைத்து குறிப்பாக வர்த்தகத்துறையின் கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிய சேவையைப் பாராட்டுவதோடு, அவர் பல்லாண்டுகாலம் சீரும் சிறப்புடனும் வாழப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்ட
வர்த்தகத்துறை ஆசிரியர்கள்.

(96010)


**பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லையா?**
**நீங்களும் பட்டதாரியாகலாம்.**

**புதிய மாணவர்களை அனுமதித்தல்**
**கல்வியாண்டு 2002/2003**

பேராதனை, யாழ்.பல்கலைக்கழகங்களின் பட்டப் பாடநெறிகளான
★ கலை முதற் தேர்வு G.A.Q.
★ வர்த்தக முதற் தேர்வு First in Commerce
க.பொ.த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்பப்படிவத்தினையும் விவரத் திரட்டினையும் ரூபா 10/= செலுத்தி நேரில்/தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
விரிவுரைகள் 05.01.2002 இல் ஆரம்பமாகின்றன.

பட்டப்படிப்புகள் கல்லூரி,
*57/13 ஸ்ரான்லி வீதி,*
*(இலங்கை வங்கி முன்பாக)*
*யாழ்ப்பாணம்.*

25வருடங்களாக பட்டப்படிப்புகளுக்கென தனித்துவமாக இயங்கும் நிறுவனம் யாழ்.நகரில் இதுவே. (96004)


# சேவை ஓய்வு வைரவிழா வாழ்த்துக்கள்



யாழ். நல்லூர், அரச வீதியைச் சேர்ந்த
டாக்டர் **பொன். கனகலிங்கம்**
துணைவியார்
ஆசிரியர் **இந்திராதேவி** அவர்களுக்கு
**சேவை ஓய்வு இல்லற**
**வைரவிழா வாழ்த்துக்கள்**

சிவஅன்பா
இந்திரா ஆசிரியை இளைப்பாறும் வேளைதனில்
கந்தவேள் எந்த கருணையினால் - வந்துதிந்தோர்
நல்லாயுள் பெற்று நலமுடனே ஓங்கிடுக
சந்தமும் வாழ்க தழைத்து.

**கூடிய காலம் சேவையாற்றிய பாடசாலைகள்:**
யா/ஞானோதய வித்தியாலயம்
யா/காசிப்பிள்ளை வித்தியாலயம்
கி/பளை மகாவித்தியாலயம்

**வாழ்த்துவோர்கள்:**
*தந்தை* - பண்டிதர் சு.இராசையா, } *சிட்னி, ஆஸ்திரேலியா*
*தாயார்* - பொன்னம்மா,
*பிள்ளைகள்* - இராஜ்மோகன் *(பொறியியலாளர், ஆஸ்திரேலியா)*
ஜெகமோகன் *(கனடா)*
சந்திரமோகன் *(இறுதியாண்டு மருத்துவபீடம்)*
ஜெயந்தி *(ஆசிரியை)*
*மருமகன்* - லோகநாதன் (U.K)
*பேரப்பிள்ளைகள்* - மீரா, ஸ்ரீராம், சந்தியா
*சகோதரர்கள்.*
*ஞானோதய அதிபர், ஆசிரியர்குழு, மாணவர்கள்.*

(96008)

## இன்றறக்ட் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.16

நல்லூர் றோட்டரக்ட் கழக அங்கத்தவர்களுக்கான பாதனியம் அழிப்பு தொடர்பான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கஸ்தூரியார் வீதியில் உள்ள அருண்ஸ் ஸ்பீட்ஸ் ஸ்பொட்டில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடல் கொக்குவில் இந்துக் கல்லூரி, வைத்தீஸ்வராக் கல்லூரி, புனித பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றின் இன்றறக்ட் கழக தலைவர் மற்றும் செயலாளர் உட்பட தலா ஐந்து பேரை கலந்துகொள்ளுமாறு கழகத் தலைவர் கேட்டுள்ளார்.(ஐ-9)

## பவுஸர் மோதி சிறுவன் பலி

மன்னார்,டிசெ.16

பொலீஸ் தண்ணீர் பவுஸர் மோதிச் சிறுவன் அதே இடத்தில் மாண்ட பரிதாபச் சம்பவம் மன்னார் பள்ளிமுனையில் நிகழ்ந்தது.

மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியின் ஆறாம் ஆண்டு மாணவனான மெசிஸன் யூட் (வயது 12) என்னும் சிறுவனே இறந்தவராவார்.

பள்ளிமுனை வீதியில் சென்றுகொண்டிருக்கையில் பிரஸ்தாபச் சிறுவனை பொலீஸ் தண்ணீர் பவுஸர் மோதியது. பவுஸர் சில்லில் தலை சிக்கி சிறுவன் இறந்தான். (க)

## குப்பி விளக்கினால் யுவதிக்கு எரிகாயம்

தென்மராட்சி,டிசெ.16

ஸ்ரூல் மீது வைக்கப்பட்டிருந்த குப்பி விளக்கு சரிந்து வீழ்ந்ததில் அங்கு சாப்பிட்டுக் கொண்டிருந்த இளம் யுவதி எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இச்சம்பவம் கடந்த வியாழன் இரவு கரவெட்டி மேற்கு ஸ்ரீநாரதா வீதியில் இடம்பெற்றது.

இதேஇடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் சாந்தினி (வயது 18) என்னும் யுவதியே எரிகாயங்களுக்கு இலக்காகிய நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-117)

### கணக்காய்வாளர் நேர்முகப்பரீட்சை

மேற்படி நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்வதற்கான பயண ஒழுங்கு பற்றிய கலந்துரையாடல் இன்று (16.12.2001) பிற்பகல் 2.00 (பு.நே.) மணிக்கு 'கம்பன் கோட்டம்' 300, கோவில் வீதி, நல்லூரில் இடம்பெற உள்ளதால் நேர்முகப் பரீட்சைக்குச் செல்பவர்கள் தயவு செய்து கலந்துகொள்ளவும்.

– பா.முகுந்தன்.

(96007)


**லஷ்சுமி** இணுவில்
பிரசாந்த், ஷாலினி நடித்த
**பிரியாத வரம் வேண்டும்**
(ரீல்ஸ்)
தினசரி 10.30, 2.30 (பழைய நேரம்)
(96005)

**ராஜா** யாழ்ப்பாணம்
ஐந்தாவது வாரமாக
கமல், மனீஷா
மற்றும் பலர் நடித்த
**ஆளவந்தான்**
தினசரி:- 10.30,2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2, 5 (புதிய நேரம்)
(C/12779)

**நாகம்ஸ்** சுன்னாகம்
3ஆவது வெற்றி வாரம்
பிரசாந்த், ஷாலினி, மணிவண்ணன்
நடித்த
**பிரியாத வரம் வேண்டும்**
(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 3.00 (புதிய நேரம்)
(95999)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
புதிய சினிமா வீடு
அஜித், தேவயானி, பார்த்திபன்
நடித்த
**நீ வருவாய் என**
(ரீல்ஸ்)
சிறந்த பாடல்கள் நிறைந்த படம்
காட்சிகள்: 11.00, 2.30, 5.30
(C/12778)


# கிளிநொச்சி, முல்லை ஆஸ்பத்திரிகளுக்கு கொழும்பில் இருந்து பழுதடைந்த மருந்து

கொழும்பு,டிசெ.16

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைகளுக்கு சிறிலங்கா அரசின் சுகாதார அமைச்சு அனுப்பி வைத்துள்ள மருந்துவகைகளுள் பழுதடைந்த மருந்துகளும் உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டின் இறுதிக் காலாண்டுக்கென அனுப்பி வைக்கப்பட்டுள்ள மருந்துகளில் குடல் புண்ணுக்குப் பாவிக்கும் குளிசை பூஞ்சணம் பிடித்து பழுதடைந்த நிலையில் உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட இக்குளிசை வழமைக்கு மாறாக பொலித்தீன் உறைகளுள் பொதியிடப்படாது பிளாஸ்டிக் கொள்கலன்களில் செறிகளாக போடப்பட்டு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கொள்கலன்களின் வெளிப்புறத்தில் 2004 ஆம் ஆண்டு வரை பயன்படுத்தலாம் என்ற உறுதிப்படுத்தல் குறிப்பு பொறிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. பழுதடைந்து காணப்படும் மருந்துகளை நோயாளர்களுக்கு வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதனால் நோயாளர்கள் பெரும் அவலங்களை எதிர்நோக்கியுள்ளனர். (ஐ)

## துயர் பகிர்வோம்

எமது சக மாணவி **து.பிறேமளாவின்** தந்தையார்

**அமரர் முத்துசாமி துரைராஜா**

அவர்களின் மறைவையொட்டி துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவர்களின் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

**HNDA** சக மாணவர்கள்.

(96002)

# மரண அறிவித்தல்கள்

## J.N. பொன்னையா

**(இளைப்பாறிய உப-அதிபர், சென்ஜோன்ஸ் கல்லூரி, சுண்டிக்குளி)**

உடுத்துறையைப் பிறப்பிடமாகவும் சுண்டிக்குளி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொழும்பை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட ஜோண் நேசதுரை பொன்னையா நேற்றுமுன்தினம் (14.12.2001) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் கமலாதேவியின் (முன்னாள் ஆசிரியை, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும் காலஞ்சென்ற அதிபர்களான பொன்னையா - கனகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், திருமதி தவமணி ஆறுமுகத்தின் பாசமிகு சகோதரனும் கமலநேசன் (**D.K.** பொன்னையா, **Finance Manager, Lankem Ceylon**), சுகன்யா (**Australia**), கவிதா (**Denmark**), அனுஷியா (**U.K.**) ஆகியோரின் அன்புத் தந்தையும், க.லஷ்மி, ராஜமனோகரன், சுதர்சன், ஐங்கரன் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (16.12.2001) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் கொழும்பு **A.F.** றேமன் மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கனத்தை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இன்று பிற்பகல் 3.30 மணியளவில் சுண்டிக்குளி பரியோவான் தேவாலயத்தில் ஞாபகார்த்த ஆராதனை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
160,Old Park Road, Chundikuli. T.P. 01-341475 (96003)
திருமதி தவமணி ஆறுமுகம் (சகோதரி)
திருமதி எ.ஜெ.புத்திசிகாமணி (சகோதரியின் மகள்)

## திருமதி கார்த்திகேசு மகேஸ்வரி

**(இளைப்பாறிய ஆசிரியை)**

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கல்முனையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கார்த்திகேசு மகேஸ்வரி அவர்கள் நேற்று (15.12.2001) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சட்டத்தரணி கார்த்திகேசுவின் அன்பு மனைவியும், பகீரதன் (பிரதிப் பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், மட்டக்களப்பு), ரவீந்திரன் (பொறியியலாளர், கனடா), சுரேந்திரன் (பொறியியலாளர், **Australiya**), பிரகலாதன் (**London**) ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகேஸ்வரியின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பத்மினி (பொறியியலாளர்), சுபைதா (கனடா), பிரமிளா (**London**) ஆகியோரது மாமியாரும் மதுரா, வைஷ்ணவி ஆகியோரது பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.12.2001) ஞாயிற்றுக்கிழமை 2.00 மணியளவில் கல்முனை பிரதி மாகாண நீர்ப்பாசன விடுதியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கல்முனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*44/8,மணல்த்தறை லேன், கந்தர்மடம்.* (96006)
து.பூபாலசுந்தரம் (சம்பந்தி)

## திருமதி சின்னத்துரை கமலாதேவி

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் உடுவில் வீதி, மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை கமலாதேவி 10.12.2001 திங்கட்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் கனகம்மா தம்பதியினரின் பாசமிகு மகளும், கணபதிப்பிள்ளை சின்னத்துரையின் அன்பு மனைவியும், மகேஸ்வரி, நாகேஸ்வரி, தில்லையீஸ்வரி, கனேசநாதன், நிர்மலாதேவி, சிவனேஸ்வரி, ராமச்சந்திரன் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான இராசதுரை (குடிவரவு, குடியகல்வு உத்தியோகத்தர்), செல்லாச்சி, சுப்பிரமணியம் மற்றும் அன்னம்மா, சரஸ்வதி, குமாரவேலு, (இளைப்பாறிய பொறியியலாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்), மகேஸ்வரி, குணமணி, நாகேஸ்வரி, தவமணி ஆகியோரின் மைத்துனியும், கஜவதனி, சிவகுமார் (சின்னத்துரை ஸ்ரோர்ஸ், மானிப்பாய்), காலஞ்சென்ற ரமணி மற்றும் கீர்த்தினி (லண்டன்), சாந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும், V.K. அருந்தவநாதன் (கூட்டுறவுப் பரிசோதகர்), ரஞ்சிதமலர் (ஆசிரியை, உடுவில் மகளிர் கல்லூரி), சிவபாலன் (தொழில்நுட்பவியலாளர்), வசந்தன் (கிரடிற் கொன்றோளர், லண்டன்), செல்வகுமார் (வர்த்தகர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அனோஷன், நிருஷன், யாதுஷன், வைஷ்ணவி, விஷ்ணுகா, பிருந்தா, சபிந்தன், பிரணவன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.12.2001) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*உடுவில் வீதி, மானிப்பாய்.* (96009) க.சின்னத்துரை (கணவர்)

# தேசிய அரசு அமைக்க 23 எம்.பிக்கள் ஆதரவு!

கொழும்பு,டிசெ.16

தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு பொது மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த 23 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணக்கம் தெரிவித்துள்ளளர்.

இந்த 23பேரில் பலர் முன்னாள் அரசில் அமைச்சர்களாக விளங்கியவர்கள் என்று முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமான ரிச்சட் பத்திரன தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விடுத்துள்ள இந்த அழைப்புத் தொடர்பாக முன்னாள் அமைச்சர்கள் ஏ.எச்.எம்.பௌசி, ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே ஆகியோருடனும் தான் கலந்துரையாடியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

யுத்தம், பொருளாதாரம், வேலை வாய்ப்பு உட்பட பல பிரச்சினைகளை நாடு எதிர்நோக்கியிருப்பதனால தேசிய அரசாங்கத்தை அமைப்பது என்ற பிரேரணை பொருத்தமானது என்றே நாம் கருதுகின்றோம்.

தற்போதைய காலகட்டத்தில் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதே பொருத்தமான நடவடிக்கை ஆகும் - என்று ரிச்சட் பத்திரன தெரிவித்தார்.

இதேவேளை -

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தேசிய அரசிலோ அனைத்துக் கட்சி அரசிலோ இணைந்துகொள்வ தில்லை என்ற முடிவு செய்துள்ளது.

ஜனாதிபதி தலைமையில் கூடிய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு எந்தவிதமான அரசாங்கப் பதவிகளையும் ஏற்பதில்லை என்று தீர்மானித்துள்ளது.

(ஐ-6)

# யாழ்., மன்னார், திருமலை ஆயர்கள் ரணிலுக்கு ஆசி!

கொழும்பு,டிசெ.16

புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வெள்ளியன்று மூன்று தமிழ் கத்தோலிக்க ஆயர்களைச் சந்தித்து ஆசிபெற்றார்.

மரியாதையின் நிமித்தம் ஆயர்கள் பிரதமரைச் சந்தித்ததாக கொழும்பு ஆயர்கள் பேரவை தெரிவித்தது.

யாழ். ஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகம், மட்டு - திருமலை ஆயர் அதிவண கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆகிய மூன்று ஆயர்களுமே பிரதமரைச் சந்தித்துப் பேசினர்.

பிரதமருக்கு வாழ்த்துத் தெரிவித்த ஆயர்கள் தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு நீடித்த நிலையான தீர்வு ஒன்றைக்காண உழைககுமாறு அவரிடம் கேட்டுக் கொண்டனர்.

இதேவேளை -

கொழும்பில் தங்கியுள்ள தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆயர்களைச் சந்தித்துப் பேசினர். (ஐ)

## தெற்கில் இன்னமும் மின்வெட்டு அமுலில்!

கொழும்பு,டிசெ.16

உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாத மின்வெட்டு கடந்த இரு வாரகாலமாக தென்னிலங்கையில் அமுல செய்யப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாலை 6.30 மணிமுதல் இரவு 8.30 மணிவரையான அதி உச்ச மின்பாவனை நேரத்தில் 45 நிமிட நேரத்துக்கு மின்வெட்டு அமுல் செயயப்படுவதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அடுத்த ஆண்டின் நடுப்பகுதி வரை இந்த மின்வெட்டை அமுல் செய்ய வேண்டி இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நிலையான அரசியல் தீர்வே அமைதியைக் கொண்டு வரும்

## திருமலையில் கனடா தூதர் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.16

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதன் மூலமே நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்த முடியும். இதற்கு சாத்தியமான அரசியல் தீர்வு ஒன்று உருவாக்கப்படவேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கைக்கான கனடா நாட்டுத் தூதுவர் றூத் ஆச்சிபோல்ட்.

சர்வதேச மனித உரிமைகள் தினம் தொடர்பாக நேற்றுக்காலை திருகோணமலை கலாசார மண்டபத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

அரசியல் தீர்வின் மூலமே நாட்டில் நிரந்தர சமாதானத்தையும், அமைதியையும் ஏற்படுத்த முடியும் இந்த விடயம் தொடர்பாக நோர்வே அரசின் ஆதரவுடன் நாமும் முழுமையான ஆதரவை வழங்கத் தயாராக உள்ளோம்.

கடந்த 8மாத காலத்துக்கு முன்னர் இது தொடர்பாக வன்னி மாவட்டத்தில் உள்ள புலிகளின் பிரதிநிதிகளுக்கும் நாம் அறிவித்துள்ளோம் - என்று அவர் தெரிவித்தார்.

(ஐ-6)

## பிரதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கிறார்.

இதேவேளை -

பிரதி சபாநாயகர் பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நிராகரித்துவிட்டதாக மற்றொரு தகவல் தெரிவித்தது.

எந்தக் காரணத்தைக் கொண்டும் பிரதி சபாநாயகர் பதவியை தமது கட்சி ஏற்கப்போவதில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகிறது.

இதற்கிடையில் -

பிரதி சபாநாயகராக தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவருமான வீ.ஆனந்தசங்கரியை நியமிக்க முயற்சி எடுக்கப்படுவதாகவும் தெரியவந்தது. (ஐ-6)

## நாடாளு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தன், உபதலைவர் வீ.ஆனந்தசங்கரி, ரெலோ சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், முதல்வர் என்.ஸ்ரீகாந்தா, ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணியின் சார்பில் அதன் செயலாளர் சுரேஷ் பிரேமச் சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் சார்பில் அதன் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் ஆகியோர் இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

இக்குழுவினர் நாளை திங்கட் கிழமை மீண்டும் ஒன்றுகூடி கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவரைத் தெரிவு செய்வர். அதனைத் தொடர்ந்து தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டமும் நடைபெறும் - என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-6)

## உலக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர் கைது செய்யப்பட்டதை அடுத்தே புலிகளின் தாக்குதல் திட்டம் தொடர்பான பரபரப்பான தகவல்கள் கிடைக்கப்பெற்றிருப்பதாக பயங்கரவாத ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்திருக்கின்றனர்.

23வயதான அந்த நபர் இம்மாதத தொடக்கத்தில் வவுனியாவில் வைத்துக் கைதுசெய்யப்பட்டதாகவும் -

விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவுக்காகச் செயற்பட்டுவந்த உறுப்பினரான பிரஸ்தாப இளைஞர் 1997இல் வவுனியாவில் இருந்து கொழும்புக்கு வந்து நாவலவில் உள்ள திறந்த பல்கலைக்கழகத்தில் கணனித் துறையில் டிப்ளோமா பயிற்சிநெறியைப் பயின்றவர் என்றும் -

அதன் பின்னர் தலைநகரில் பல தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்து வந்தார் எனவும் -

பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர்.

அலரிமாளிகை மற்றும் உலக வர்த்தக மையம் என்பன தொடர்பான உளவுத் தகவல்களை அந்த இளைஞர் துல்லியமாகச் சேகரித்து வைத்திருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறியிருந்ததும் தெரிந்ததே.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் செயலாளர் நாயகம் கே.என்டக்ளஸ் தேவானந்தாவும் உதவியாளர்கள் எவரும் இன்றி இப்பேச்சுவாத்தையை நடத்தியுள்ளனர். எதிர்காலத்திலும் பேச்சுக்கள் தொடரக்கூடிய நல்லெண்ணச் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களது இந்திய விஜயம் வெற்றிகரமாக அமைய செயலாளர் நாயகம் அவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். இந்திய விஜயத்தை அடுத்து சந்திப்புக்கள் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது - இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நிதி உதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதாரத்தின் பெரும் வளம் விரயமாக்கப்பட்டுவிட்டது. நாட்டின் நிதி இருப்பு மிகவும் வங்குரோத்தான ஒரு கட்டத்தை எட்டியிருக்கிறது. இந்நிலையில் மின்வெட்டு போன்ற பாதிப்புக்களும், குறுகிய காலப் பகுதிக்குள் தேர்தல்களை நடத்தவேண்டிய அரசியல் ஸ்திரமின்மையாலும் நாட்டின் பொருளாதாரம் மேலும் அதலபாதாளத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது.

இந்நிலையில் புதிதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள ரணில் விக்கிரமசிங்கவின் நிர்வாகம் மிகப் பெரிய சவாலை. அதாவது பொருளாதாரப் பேரழிவை எதிர்நோக்கும் நாடு ஒன்றை வழிநடத்தும் பொறுப்பை எதிர்கொண்டுள்ளது - என்று மேற்குலக ராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.

இத்தகைய சூழ்நிலையில் நாட்டின் தேசியப் பிரச்சினையான இனப் பிரச்சினைக்கு எப்படியாவது தீர்வு கண்டாகவேண்டிய பாரிய பொறுப்பும், கட்டாயமும் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீது சுமத்தப்பட்டிருக்கிறது. இதனால் கடந்த அரசு போன்று யுத்தத்தை தீவிரமாக முன்னெடுக்கவோ அன்றி யுத்த முனைப்புடன் ஆட்சியைத் தொடரவோ புதிய ஆட்சியாளர்களால் முடியாது என்று ராஜதந்திரி ஒருவர் கருத்துத் தெரிவித்தார் (ஐ-6)

## தற்பாதுகாப்பு...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தும் முயற்சிக்கும் தேச ஒருமைப்பாட்டுக்கும் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும் என்பது அனைவரும் அறிந்ததே - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

***ஆசிரியர் குறிப்பு:***

*'ஈ.பி.டி.பியின் அரசியல் எதிர்காலம் குறித்து புதிய அரசுடன் டக்ளஸ் பேசுவார்' என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் முதலாம் பக்கத்தில் வெளியான செய்தி கொழும்பு ஆங்கிலச் செய்தி ஏடு ஒன்றில் வெளிவந்த செய்தியை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டதாகும்.*

*அச் செய்தி குறித்து உதயனுக்கு அனுப்பிய மறுப்பை கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைகளிலும் பிரசுரமாகக் கூடியவாறு அவற்றுக்கும் அனுப்பி வைத்தால் நல்லது.*

*ஈ.பி.டி.பி என்பது சட்டவிரோதமான ஆயுதக்குழு அல்ல என்றும் அது அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சி என்றும் தங்களின் சொந்தப் பாதுகாப்புக்காகவே ஆயுதங்களை வைத்திருப்பதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*ஆனால் தங்களை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி என்று கூறுவோர் 1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் துணைப்படை என்ற பெயரில் பதவியில் இருந்த அரசுகளிடம் இருந்து எந்த விதமான வேதனத்தையும் பெற்றுக்கொள்ளவில்லை என்பதை உறுதிப்படுத்துவதும் நல்லது.*

*(ஆ-ர்)*


## என் அன்பார்ந்த யாழ்.குடாநாட்டு மக்களே!



கடந்த தேர்தலில் என்னை வெற்றிபெறச் செய்து நாடாளுமன்றம் அனுப்பியமைக்கு மீண்டும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த தேர்தலில் என் வெற்றிக்கு தோளோடு தோள் நின்று கடுமையாக உழைத்த என் உயிரிலும் மேலான எனது நண்பர்கள், ஆதரவாளர்கள் எனது வெற்றியினைப் பத்திரிகைகளில் பாராட்டி வாழ்த்துவது எனது வெற்றியின்பால் நீங்கள் கொண்ட மகிழ்ச்சியினை மிகவும் தெளிவாக வெளிக்காட்டுகின்றது என்பதில் ஐயமில்லை. எனினும் நாம் அனைவரும் கடந்த தேர்தல் எந்த 'அரசியல் கலாசாரம்' யாழ்.குடாநாட்டில் இருந்து அறவே நீக்கப்படவேண்டும் என்று கடுமையாக உழைத்தோமோ; அந்த இலக்கு எட்டப்பட்ட நிலையில், மீண்டும் அதே அரசியல் கலாசாரம் யாழ்.குடாநாட்டில் தலைதூக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துவது நம் அனைவரினதும் தலையாய கடமையாகும்.

எனவே **அன்புக்கினிய மக்களே!** தாங்கள் என்மீது கொண்ட அன்புக்கும், ஆதரவுக்கும் நான் சிரம்சாய்க்கும் அதேவேளை நீங்கள் என்னைப் பத்திரிகைகளில் பாராட்டி வாழ்த்துவதற்குப் பதிலாக அதற்குச் செலவாகும் பணத்தினை ஏழைகளுக்குக் கொடுத்துதவி அவர்களின் ஒரு நேரப் பசியாற உதவுமாறு மிகவும் தாழ்மையுடன் தங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

இதனையும் விஞ்சி வாழ்த்துத் தெரிவிக்க விரும்புவோர் வாழ்த்துக்களை எனது இல்லத்துக்கோ, அலுவலகத்துக்கோ குறைந்த செலவில் தபால் மூலம் அனுப்பிவையுங்கள். இது எனது அன்பான வேண்டுகோள்.

**திரு.தி.மகேஸ்வரன்**
**இந்து கலாசார அமைச்சர்.**

(C/19782)



**BEACON**
**கல்வி நிறுவனத்தில்**
20வருட ரியூசன் அனுபவத்தில்
மிகவும் ஒழுங்கு கட்டமைப்புடன்.
**K. விஜயனின்**
**(V.T.C.) நிர்வாகத்தின் கீழ்**
மாலை நேர வகுப்புக்கள்
ஆண்டு 6 - O/L வரை.
ஆண்டு 5 புலமைப்பரிசில் வகுப்புகள்
தனிப்பாட ஆங்கில வகுப்புகள்
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
ஆரம்பம்:-19.12.2001 மாலை 3.30 ம.நே.
(95993)



## கண்ணீர் அஞ்சலி

**திருமதி இராமசாமிப்பிள்ளை சிவப்பிரகாசம்**

(சிவப்பிரகாசம் வீதி, வண்ணை மேற்கு)
அவர்கள் 13.12.2001 இல் கொழும்பில் காலமானார்.
"தந்தை சொல் மிக்க மந்திரமில்லை
தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை"

அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துவதோடு அவரின் இழப்பால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*
(95967) **கண்ணன் லொட்ஜ்**



CLOSING DOWN SALES

COST TO COST SALES!

COST TO COST SALES!

## விற்றுத் தீர்த்தல்!!



சிறியோர் முதல் பெரியோர் வரை இருபாலாருக்குமான சகல விதமான ரெடிமேட் புடைவை வகைகளும இன்று (16.12.2001) ஞாயிறு தொடக்கம் 31.12.2001 திங்கள் வரை குறைந்த விலையில் விற்றுத் தீர்க்கப்படவுள்ளன.

☆பேபி சூட் ☆புறக் ☆பஞ்சாபி ☆சேட்
☆பேபி புறக் ☆ஸ்கேட் & பிளவுஸ் ☆சோளிகிற் ☆T.சேட்

மற்றும்
சாறிவகைகள் அனைத்தும்

**சங்கமம் ரெக்ஸ்**

54A, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம். (C-19776)



## பொங்கு தமிழ் நூல் வெளியீடு செய்வதற்கான ஆக்கங்கள் கோரல்

1. தமிழ் மக்கள் மீதான சிங்கள அரசின் வரலாற்று ரீதியான இன ஒடுக்குமுறையும் அதன் விளைவுகளும்.
2. தமிழர் உரிமைப்போராட்டத்தின் நியாயத்தன்மை.

என்பவற்றை உள்ளடக்கியதான வரலாற்றுச் சுவடியையும் ஒலிப்பதிவு நாடாவினையும் உருவாக்கும் முன்முயற்சியை எடுத்துள்ளோம். இதற்காக எமது உறவுகளிடமிருந்து உணர்வுமிக்க உண்மைச் சம்பவங்களைத் தழுவிய ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்.

உங்களின் தரமான ஆக்கங்கள்
1. கட்டுரைகள் 2. கவிதைகள் 3. ஓவியங்கள் 4. பாடல்கள்

முடிவு திகதி: 31.12.2001

முகவரி:
பத்திராதிபர்,
யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம். Fax:- 021-2423

(95948)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.12.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.